பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை (13.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207




## புலிகளுக்கு இந்தியா உதவிக்கரம் நீட்டாது

# ஆயுதங்களை கீழே போட்டால் புலிகளுடன் பேச அரசு தயார்



### திருப்பதியில் வைத்து ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,புலிகளுக்கு இந்தியா உதவி செய்யுமென தான் நினைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் திருப்பதிக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, திருப்பதி தேவஸ்தானத்தில் வழிபாட்டை முடித்துவிட்டு அங்கிருந்த ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பெங்களூருக்கு நேற்று முன்தினம் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பத்துப்பேர் அடங்கிய குழுவினர் அங்கிருந்து இந்திய விமானப்படை விமானத்தில் திருப்பதிக்கு அண்மையில் உள்ள றெனிகுந்தா விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

றெனிகுந்தா விமான நிலையத்தில் இறங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினரை மாவட்ட ஆட்சியர் எம்.ரவிச்சந்திரா, பொலிஸ் அத்தியட்சகர் கே.லக்ஸ்மி ரெட்டி உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அங்கிருந்து நேரடியாக திருப்பதி தேவஸ்தானத்திற்கு பலத்த பாதுகாப்புடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினர் காரில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

திருப்பதி வெங்கடேஸ்வரர் கோயில் பிரதான வாயிலில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினரை இரவு 8 மணியளவில் கோவில் நிர்வாகத்தினர் வரவேற்றனர்.

மகிந்த ராஜபக்ஷ குழுவினரை வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு முன்கூட்டியே செய்திருந்தது. (12ஆம்பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான இராணுவ உதவியை நிறுத்தப்போவதாக சீனா எச்சரிக்கை

(கொழும்பு)

எண்ணெய் வள ஆய்வுகள் தொடர்பாக இந்தியாவுடன்செய்து கொண்ட உடன்படிக்கையை முடிபுக்குக் கொண்டுவர இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் இராணுவ உதவிகளை நிறுத்தப்போவதாக சீன அரசாங்கம் எச்சரித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் வள ஆய்வுகளை மேற்கொள்வது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை இந்தியாவின் கெயின் நிறுவனமும் இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபன அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

இலங்கையில் எண்ணெய் வள ஆய்வுப் பணிகளை சீனாவிடம் கையளிப்பதற்கே இலங்கை முன்னர் இணங்கியிருந்தது. எனினும் தற்பொழுது இந்திய நிறுவனத்திடம் இந்தப்பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு பீஜிங்கால் இலங்கைக்கு வழங்கப்பட்ட போர் உதவிகள் 37.6 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்தன. இதன் மூலம் இலங்கைக்கு அதிகளவான உதவிகளை வழங்கும் நாடாக ஜப்பானை வட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கூடுதலான உதவிகளை சீனா வழங்கியிருந்தது.

இதற்கும் மேலதி (12 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் க.பொ.த. உயர்தரப் பரீட் சைக்கான

**'இரசாயனவியல்'**

பாட மாதிரி வினாத்தாள்.

## கடத்தல் கும்பல் திருமலையில் கைது

(திருகோணமலை).

திருகோணமலையில் கடத்தல்களை மேற்கொண்டு வந்த நான்கு முக்கிய நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பணத்தை வழங்க மறுத்த ஆறு வர்த்தகர்களை கொலை செய்த குற்றச் சம்பவங்களுடன் கைது செய்யப்பட்ட நபர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடத்தல் கும்பலில் ஒரு பட்டதாரியும் பெண் ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

கடத்தல்களை (12ஆம் பக்கம் பார்க்க)

## வதந்திகளை நம்பவேண்டாம் புலிகளின் புலனாய்வுத்துறை

(கிளிநொச்சி)

ஆதாரமற்ற தகவல்களை அப்படியே நம்பிவிடும் மன நிலையிலிருந்து விடுபட்டு பகுத்தறியும் திறன்கொண்ட மக்களாக நாம் இருக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் 'பொய்மையில் இருந்து உண்மைக்கு' எனும் தலைப்பில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அன்பிற்குரிய தமிழீழ மக்களே!

அரசு தனது முப்படைகளையும் கொண்டு தமிழர் தாய் மண்மீது ஒரு கொடிய போரை ஏவி விட்டுள்ளது.

மூர்க்கமான இப்போரின் மூலம் தமிழரை அடிமைப்படுத்த முயலும் அரசு, தனது சூழ்ச்சிகரமான உளவியல் போரையும் தொடுத்துள்ளது. உளவியல் போரின் இலக்காக மக்களை தேர்ந்தெடுத்திருக்கும் அரசு மக்களிடையே வதந்திகளைப் பரப்பி மனங்களை குழப்பி வருகிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் பலமாகத் திகழ்வது மக்கள் சக்தியே. இந்த மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக்க முடியும். (12ஆம் பக்கம் பார்க்க)

## கையடக்கத் தொலைபேசிகளின் 'சிம்' அட்டைகளையும் படையினர் சோதிப்பர்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கையடக்க மற்றும் சி.டி.எம்.ஏ தொலைபேசி பாவனையாளர்களுக்கு உடனடியாக இறுக்கமான புதிய நடைமுறை கொண்டுவரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறைகளின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக கையடக்க மற்றும் சி.டி.எம்.ஏ தொலைபேசிப் பாவனையாளர்களின் முழுமையான விபரம் திரட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரோ அல்லது பொலிஸாரோ கேட்கும் பட்சத்தில் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துவோர் அதற்குரிய சிம் காட்டின் உரிமை தொடர்பான ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்று தொலைத் தொடர்பாடல் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த காரியப் பெரும தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளின் சிம் காட்களை பரிசீலிப்பதற்கான உரிமையை பாதுகாப்பு அமைச்சு படையினருக்கும் பொலிஸாருக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பணி பகிஷ்கரிப்பு போராட்டம் படுதோல்வி ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் வீழ்ச்சியடைந்துள்ளதெனக் காட்ட ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி யினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் படு தோல்வியடைந்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டபணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை மக்கள் நிராகரித்தமைக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன் எல்லாவற்றுக்கும் மேலாக சுதந்திரமான ஓர் நாட்டை உருவாககு வதற் கு மக்கள்காட்டும் அக்கறைபோற்றத்தக்க தெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் என் நல்லாட்சிக்கு ஆதரவுதெரிவிக்கும் வகையில் நாடு முழுவதிலும் உள்ளதொழிலாளர்கள்பணிப் பகிஷ்கரிப்பைப் புறக்கணித்துள்ளதாகத் தினமின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ)

## கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ள பாரியபோராட்டம் முன்னெடுக்கப்படும்

### ஜே.வி.பி. உறுப்பினர் லால்காந்த

நடத்தப்பட்ட பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தின் நன்மை தீமைகளை கருத்திற்கொண்டு எதிர் காலத்தில் பாரிய போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாக ஜே.வி.பி.பாராளு மன்ற உறுப்பி னர் கே. டி.லால் காந்த தெரிவித் துள்ளார். தொழிற் சங்கப்போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத் துப் தொழிற் சங்கங்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என அவர் குறிப்பட்டார். எதிர்காலத் தொழிற் சங்க நடவடிக்கை கள் குறுத்தும் திர்மானிக்கப்படவுள்ளதாக அவர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஓ)



அண்மையில் நடைபெற்ற அராலி மத்தி வண்ணபுரம் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வ நாதேஸ்வரர் தேவஸ்தான தேர்த்திருவிழா நிகழ்வையும் சுவாமி வெளி வீதி உலா வரும் காட்சியையும் படங்களில் காணலாம்.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் இயங்கும் காமாட்சி முன்பள்ளியின் வருடாந்த மெய் வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காமாட்சி முன்பள்ளி மைதானத்தில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் அ.ஜெயராமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஆர் .எம் சத்திய குமார் கலந்துகொள்வார். (ஓ)

## உள்ளூராட்சி வார குடும்ப கண்காட்சி விழா -2008

(யாழ்ப்பாணம்)

சங்கானை உள்ளூராட்சி வார விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடாத்தும் குடும்ப கண்காட்சி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் II குடும்பச் செயலாளர் திருமதி நி.பன்னீர்ச்செல்வம் தலைமையில் தொல்புரம் சமுத்திரா முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக INSGD மூளாய் இயக்குநர் திருமதி பொன் மலர் இராஜேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஆரம்ப பிள்ளை கல்வி அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.குகனேசன் , சுழிபுரம் உப அலுவலக பொறுப்பதிகாரி சி. சிவராச சிங்கம் மற்றும் சுழிபுரம் வலி மேற்கு பிரதேச சபை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் பே.தபேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக அராலி சரஸ்வதி முன்பள்ளி ஆசிரியை செல்வி வீ. சிவநாயகம், வட்டுக்கோட்டை காந்தியி முன் பள்ளி ஆசிரியை செல்வி இ.சத்தியகுமாரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யூனியன்ஸ் அசுரன்ஸ் ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி சங்க அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு சிறி நாராயணா சன சமூக நிலைய மைதானத்தில் கோ. நரேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத் தலைவர் செ. சண்முகலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கட்டட ஒப்பந்த காரர் செ.சிவலிங்கம், யூனியன்ஸ் அசுரன்ஸ் D.M.O S.அன்ரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் மானிப்பாய் பெஸ்வுறம் எதிர் சுதுமலை புவனேஸ்வரியம்பாள் ஆகிய கழகங்கள் மோத்வுள்ளன. (ஓ)

## ஜெய்க்கா செயற்றிட்ட செயலமர்வு

ஜெய்க்கா செயற்றிட்டத்தின் கீழ் யாழ். வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 10பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்வி பணிமனையில் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் ஜெய்க்க செயற்றிட்டத்தின் கீழ் உள்ள 10 பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்து அதிபர்களும் அப் பாடசாலைகளைச்சேர்ந்த இச்செயற்றிட்டத்தில் ஆர்வமுள்ள 4 ஆசிரியாகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல் விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக
புதிய கட்டடத் திறப்புவிழா



காலம் : 14.07.2008 திங்கட்கிழமை 9.00 மணி
இடம் : பிரதானவீதி, பருத்தித்துறை.
தலைமை : திரு. இ. வரதீஸ்வரன் (பிரதேசசெயலாளர்,பருத்தித்துறை)

பிரதமவிருந்தினர்
திருமிகு க.கணேஷ் (அரசாங்கஅதிபர்,யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்கள்
திருமிகு.ஆ.சிவசுவாமி(மேலதிகஅரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)
திருமிகு.வே.விசுவலிங்கம் (பிரதித்திட்டப்பணிப்பாளர், மீள்எழுச்சித்திட்டம், யாழ்ப்பாணம்.)
செல்வி.கே.வசந்தி (பிரதமபொறியியலாளர்,கட்டடத்திணைக்களம் -மத்தி)
கௌரவவிருந்தினர்கள்
திரு.சி.சத்தியசீலன் (பிரதேச செயலர்,கரவெட்டி)
திரு.மா.சிறீஸ்கந்தகுமார் ( உதவிஅரசாங்க அதிபர் ,மருதங்கேணி)
திரு.வை.செல்வராசா (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
பேராசிரியர் மா.நட்ராஜசுந்தரம் (முகாமைத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.அ.அ.நடராசா (செயலாளர், நகரசபை, பருத்தித்துறை)
திரு.கு.அமிர்தலிங்கம் (செயலாளர், நகரசபை, வல்வெட்டித்துறை)
ஆசியுரைகள்
சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்)
வணபிதா பேணாட் றெக்னோ( பங்குத்தந்தை,பருத்தித்துறை
மலர்வெளியீட்டுரை
கலாநிதி.த.கலாமணி (சிரேஷ்ட விரிவுரையாளர்,யாழ்.பல்கலைக்கழகம்)
விருந்தினர்கள் காலை 9.00 மணிக்கு புலோலி பசுபதீஸ்வரர் ஆலய முன்றலிலிருந்து அழைத்துவரப்படும் நிகழ்விலும் புதிய கட்டடத்திறப்பு விழா நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளஅன்புடன் அழைக்கின்றோம்.
பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்
C - 1308

விற்பனைப்பிரதிநிதி (Marketing Assistant); நிழற்பிரதி , கணனி தொழில்நுட்பவியலாளர் தேவை (Photocopy & Computer Technician)

Metropolitan Office (pvt) Ltd இன் கிளை நிறுவனத்துக்கு Marketing Assistant, Photocopy & Computer Technician தேவை. விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.Photocopy & Computer Technician
- Diploma in Hard ware and soft ware
- தொழில் நுட்பக்கல்லூரியில் மின்னியல் இலத்திரனியல் கற்கை நெறிச்சான்றிதழ்
- G:C.E.O/L இல் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி

2.Marketing Assistant
- G.C.E.O/L இல் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி
- அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமைவழங்கப்படும்

வயதெல்லை 21-28 வயது
உறவு முறை அற்ற இருவரின் நற்சான்றிதழ்
சாரதி அனுமதிப்பத்திரம்இருத்தல் வேண்டும்
விண்ணப்பிக்கவிரும்புவோர் 25-07-2008 இற்குமுன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Metropolitan Office (pvt) Ltd,
Dealer office, Navahala.
No.200,k.k.s.Road, Jaffna.
C - 1309

# உங்களுடைய சேமிப்புக்கு அதியுயர் பலன்களைப் பெறுங்கள்

**12%** க்கு அதிகமான வருடாந்த வட்டி வருவாய் *

கொமர்ஷல் வங்கி வழங்கும் "சுப்பர் சேவர்" சேமிப்புக் கணக்கு உங்களுக்கு மிகவுயர்ந்த நன்மைகளைத் தரும்.

> உடனடி CAT கார்ட் / உடனடி டெபிற் கார்ட் இலவசம்
> இன்டர்நெட் வங்கிச் சேவையின் ஊடாக 24 மணிநேரமும் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும்
> பண மீளப்பெறுகை எண்ணிக்கைகளுக்கு வரையறை கிடையாது
> வைப்பு மீதியில் 80% வரை விரைவான கடன் (விசேட வட்டி வீதத்தில்)
> நாடுபூராகவும் பரந்த வலையமைப்பை உடைய எமது கிளைகள், சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை கருமபீடங்கள், விடுமுறை தின வங்கிச் சேவை நிலையங்களில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்
> **உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வைப்புப் புத்தகத்தையோ அல்லது வங்கிக் கணக்கு கூற்றினையோ பேண முடியும்**

ஆகக்குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை ரூ.50,000/-

இலங்கையின் தலைசிறந்த வங்கிக்கே உரித்தான உயர்ந்த நம்பிக்கை, உறுதிப்பாடு மற்றும் தனித்துவமான சேவைகளுடன்...

* வருடாந்த விளைவு வீதம் 12.68%

FitchRatings AA+ (lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது

COMMERCIAL BANK Super saver

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

Web www.combank.lk

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

02 T I

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை

வகுப்பு 13
Grade 13

இரசாயனவியல் I
Chemistry I

இரண்டு மணித் தியாலம்
Two hours

முக்கியம்:-
- இவ்வினாத்தாள் 8 பக்கங்களில் 60 வினாக்களைக் கொண்டுள்ளது.
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) (5) என இலக்கம் இடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது.என நீர் கருதும் விடையைத் தெரிவு செய்து அதனை விடைத் தாளில் உள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையக் குறிப்பிடுக.

33. $CH_3CH=CH-C_6H_4-OH$ உடன் HBr தாக்கம் புரியும் போது பெறப்படும் விளைவு

1) $CH_3CH=CH-C_6H_4-Br$  2) $CH_3-\underset{Br}{\overset{H}{C}}-CH_2-C_6H_4-OH$

3) $CH_3CH_2-\underset{Br}{\overset{H}{C}}-C_6H_4-OH$  4) $CH_3CH_2-\underset{Br}{\overset{H}{C}}-C_6H_4-Br$

5) $CH_3CH=CH-C_6H_2Br_2-OH$

34. பின்வரும் நான்கு சேதனச் சேர்வைகளையும் கருதுக.

(a) $CH_3COCl$  (b) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-O-C_2H_5$

(c) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-NH_2$  (d) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-O-\overset{O}{\overset{\|}{C}}-CH_3$

இச் சேர்வைகளின் நீர்பகுப்புறும் ஆற்றலின் சரியான ஒழுங்கு
1) d>a >b> c  2) a>d >b> c  3) c >b >a> d
4) b>c >a>d  5) c>b >a>d

35. மூலத்திறன் இறங்குவரிசையைச் சரியாகத் தருவது
1) $(CH_3)_2NH > (CH_3)_3N > C_6H_5NH_2 > CH_3NH_2$
2) $(CH_3)_2NH > CH_3NH_2 > (CH_3)_3N > C_6H_5NH_2$
3) $C_6H_5NH_2 > (CH_3)_3N > (CH_3)_2NH > CH_3NH_2$
4) $(CH_3)_2NH > (CH_3)_3N > CH_3NH_2 > C_6H_5NH_2$
5) $(CH_3)_3N > C_6H_5NH_2 > CH_3NH_2 > (CH_3)_2NH$

36. $CH_3COONH_4$ இருந்து $C_2H_5NH_2$ இனை வேறுபடுத்துவதற்கான முறை
1) $H^4/KMnO_4$ சேர்த்தல்  2) $Br_2$ நீர்சேர்த்தல்
3) ஐதான NaOH உடன் வெப்பப்படுத்தல்  4) ஐதானHCl உடன் வெப்பப்படுத்தல்
5) $Cu_2Cl_2/NH_3$ சேர்த்தல்

37. பின்வரும் தாக்கங்களிற்கான வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் கருதுக.

$CH_3Cl \longrightarrow CH_3+Cl^-$ ; $\Delta H_1^{\ominus}$
$CH_3CH_2Cl \longrightarrow CH_3CH_2+Cl^-$ ; $\Delta H_2^{\ominus}$
$(CH_3)_2CHCl \longrightarrow (CH_3)_2CH^+ + Cl^-$ ; $\Delta H_3^{\ominus}$
$(CH_3)_3C-Cl \longrightarrow (CH_3)_3C^+ + Cl^-$ ; $\Delta H_4^{\ominus}$

மேலே தாக்கங்களின் வெப்பவுள்ளுறைகளின் இறங்குவரிசை
1) $\Delta H_3^{\ominus} > \Delta H_1^{\ominus} > \Delta H_2^{\ominus} > \Delta H_4^{\ominus}$  2) $\Delta H_4^{\ominus} > \Delta H_3^{\ominus} > \Delta H_2^{\ominus} > \Delta H_1^{\ominus}$
3) $\Delta H_2^{\ominus} > \Delta H_1^{\ominus} > \Delta H_4^{\ominus} > \Delta H_3^{\ominus}$  4) $\Delta H_3^{\ominus} > \Delta H_2^{\ominus} > \Delta H_4^{\ominus} > \Delta H_1^{\ominus}$
5) $\Delta H_1^{\ominus} > \Delta H_2^{\ominus} > \Delta H_3^{\ominus} > \Delta H_4^{\ominus}$

38. $[Pt(NH_3)_4(NO_2)Cl]SO_4$ இன் IUPAC பெயரினைச் சரியாகத் தருவது
1) Tetraamminechloronitroplatinum(II) Sulphate (VI)
2) Tetramminechloronitroplatinum(IV) Sulphate (VI)
3) Chlorotetraamminenitroplatinum (V) Sulphate (VI)
4) Chloronitrotetraammineplatinum (IV) Sulphate (VI)
5) Nitrotetraamminechloroplatinum (IV) Sulphate (VI)

39. நீர் மாதிரியொன்றில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவினை துணிவது சம்பந்தமான பின்வரும் செயற்பாடுகளில் முக்கியத்துவம் இல்லாதது
1) தாக்குபொருள் போத்தலினுள் நீர் மாதிரிய்யை நிரம்பும்போது போத்தலை நீரினுள் அமிழ்த்துதல் வேண்டும்.
2) தாக்குபொருள் போத்தலினுள் தாக்குபொருட்களைச் சேர்க்கும்போது குழாயியின் முனை நீர் மாதிரியினுள் அமிழ்ந்து இருத்தல்வேண்டும்.
3) நியமிப்பின்போது முடிவுப் புள்ளிக்கு அண்மையில் காட்டியைச் சேர்த்தல் வேண்டும்.
4) காட்டியை தெரிவு செய்யும் போது pH வீச்சிற்கு ஏற்றவாறு தெரிவு செய்தல் வேண்டும்.
5) நியமக் $KIO_3$ கரைசலைப் பயன்படுத்தி, தயாரிக்கப்பட்ட $Na_2S_2O_3$ கரைசலின் செறிவை சரிபார்த்தல் வேண்டும்.

40. அல்டிகைட்டுக்களைப் பற்றிய தவறான கூற்று
1) தொழிற்பாட்டுக் கூட்டமான காபனையில் கூட்டம் வடிவத்தில் தளமாகும்.
2) அண்ணளவாகச் சமமான சார்மூலக்கூற்றுத் திணிவுகளை உடைய அல்டிகைட்டுக்களையும் ஆற்கேன்களையும் கருதுகையில், அல்டிகைட்டின் கொதிநிலை அற்கேன்களின் கொதிநிலையிலும் உயர்வாகும்.
3) அண்ணளவாகச் சமமான சார்மூலக்கூற்றுத் திணிவுகளையுடைய அல்டிகைட்டுக்களையும் அற்ககோல்களையும் கருதுகையில், அல்டிகைட்டின் கொதிநிலை அற்ககோலிலும் உயர்வாகும்.
4) ஐதான வன் காரம் முன்னிலையில் $\alpha$- ஐதரசனைக் கொண்ட எல்லா அல்டிகைட்டுக்களும் ஒடுங்கலைக் காட்டும்.
5) சில அல்டிகைட்டுக்கள் பீலிங்கின் கரைசலுக்கு விடையளிக்கமாட்டாது.

*வினா 41 இல் இருந்து 50 இற்கான அறிவுறுத்தல்கள்*

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| (a)யும்(b)யும் மாத்திரம் திருத்தமானவை | (b)யும்(c)யும் மாத்திரம் திருத்தமானவை | (c)யும்(d)யும் மாத்திரம் திருத்தமானவை | (d)யும்(a)யும் மாத்திரம் திருத்தமானவை | வேறு தெரிவுகளில் எண்ணோ சேர்மானங்களோ திருத்தமானவை |

41. நியமிப்புச் சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களில் எது/எவை சரியானது/சரியானவை?
(a) எல்லா நியமிப்புக்களிலும் முடிப்புள்ளிகளை அறிவதற்கு காட்டிகள் பயன்படுத்தப்படும்
(b) எல்லா அமில - மூல நியமிப்புகளிலும் காட்டிகள் பயன்படுத்தப்படும்
(c) சில ஒட்சியேற்ற- தாழ்த்தல் நியமிப்புகளில் காட்டிகள் பயன்படுத்தப்படும்.
(d) சில ஒட்சியேற்ற- தாழ்த்தல் நியமிப்புகளில் பொருத்தமான தாக்கு பொருட்கள் சுயகாட்டியாகச் செயற்படும்.

42. பின்வரும் வெப்ப இரசாயனத் தரவுகளைக் கருதுக.
$\Delta H^{\ominus}_{f(SO_2(g))} = -297\ kJ\ mol^{-1}$ ;  $\Delta H^{\ominus}_{f(SO_3(g))} = -395.4\ kJ\ mol^{-1}$

மேலே தரப்பட்ட தரவுகள் சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் சரியானது?/சரியானவை?
(a) $SO_3(g)$ இலும் பார்க்க $SO_2(g)$ உறுதிகூடியது
(b) $SO_3(g)$ இலும் பார்க்க $SO_2(g)$ இனைத் தயாரிப்பது இலகுவானது.
(c) $SO_2(g)$ இல் இருந்து $SO_3(g)$ இனை தயாரிக்கும் தாக்கம் புறவெப்பத் தாக்கமாகும்.
(d) $SO_2(g)$ இல் இருந்து $SO_3(g)$ இனைத் தயாரிக்கும் தாக்கம் அகவெப்பத் தாக்கமாகும்.

43. வெண் பொசுபரசையும் செம்பொசுபரசையும் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(a) வெண் பொசுபரசு நீரின் அடியில் சேமிக்கப்படுகிறது. ஆனால் செம்பொசுபரசு அவ்வாறு சேமிக்கப்படுவதில்லை
(b) வெண் பொசுபரசும், செம்பொசுபரசும் $Ba(OH)_2$ உடன் $PH_3$ உருவாக்கிறது.
(c) வெண்பொசுபரசைப் போன்று செம்பொசுபரசும் $O_2(g)$ உடன் ஒரே வீதத்தில் தாக்கம்புரியும்.
(d) வெண்பொசுபரசு, செம்பொசுபரசு இரண்டும் $Cs_2$ இல் கரையும்.

44. நுண்டுளை முறையில் NaOH தயாரிப்பு சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களில் சரியானது? சரியானவை?
(a) கிரபைட்டு அனோட்டும் உருக்குக் கதோட்டும் மின்வாய்களாகப் பயன்படுத்தப்படும்.
(b) நுண்டுளை கலத்தில், ஒரு அறையில் காணப்படும் கரைசல் மற்றைய அறையில் காணப்படும் கரைசலிலும் உயர்வாகக் காணப்படும்.
(c) NaCl இன் ஐதான கரைசல் மின்பகுப்பிற்குப் பயன்படுத்தப்படும்.
(d) $Cl_2(g)$ உம் , $O_2(g)$ உம் பக்கவிளைவுகளாகப் பெறப்படும்.

45. பின்வரும் கூற்றுக்களில் எது/எவை சரியானது/சரியானவை?
(a) NaOCl இன் வெளிற்றும் இயல்பு ஒட்சியேற்றும் செயற்பாடாகும்.
(b) $Na_2SO_3$ இன் வெளிற்றும்இயல்பு தாழ்த்தும் செயற்பாடாகும்.
(c) இறப்பர் கைத்தொழில், HCOOH இறப்பரின் திரட்சியிற்கு பயன்படுத்தப்படும்.
(d) வெப்பமேற்றும் போது PVC ஐப் போன்று பேக்லைற்றும் வெப்பம் இளகும்.

46. பின்வரும் துவிதக் கரைசல்களில் எது/எவை இரவோற்றின் விதியில் இருந்து நேர் விலகலைக் காட்டும்?
(a) $CH_3CH_2OH + H_2O$  (b) $HNO_3 + H_2O$
(c) $C_6H_5Cl + C_6H_5Br$  (d) $CH_3COCH_3 + CH_3OH$

47. எந்தச் சோடிக் கரைசல் / கரைசல்கள் தாங்கற் செயற்பாட்டை காட்டும்?
(a) HCOOH (aq) / HCOONa(aq)  (b) $NaHSO_4(aq)/ Na_2SO_4(aq)$
(c) $CH_3NH_2(aq) / CH_3CONH_2(aq)$  (d) $H_3PO_4(aq) / H_2PO_4^-Na^+(aq)$

48. பின்வரும் தாக்கங்களில் எதை/எவற்றைப் பயன்படுத்தி மின்னிர்சாயனக் கலத்தை உருவாக்கமுடியும்?
(a) $2Fe^{3+}(aq) + 2I^-(aq) \longrightarrow 2Fe^{2+}(aq) + I_2(aq)$
(b) $Fe(s) + 2Ag^+(aq) \longrightarrow Fe^{2+}(aq) + 2Ag(s)$
(c) $6OH^-(aq) + 3Cl_2(g) \longrightarrow ClO_3^-(aq) + 5Cl^-(aq) + 3H_2O(l)$
(d) $Cu(s) + NiSO_4(aq) \longrightarrow CuSO_4(aq) + Ni(s)$

49. $H_2N-C_6H_4-N=N-C_6H_2Br_3$ எனும் சேர்வை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது?/ சரியானவை?
(a) $C_6H_5-NO_2$ ஆரம்ப மூலப்பொருளாகப் பயன்படுத்தி மேற்படி சேர்வையைத் தொகுக்க முடியும்.
(b) $Br-C_6H_2Br_2-NH_2$ இற்கும் $Br-C_6H_4-\overset{+}{N_2}Cl^-$ இற்கும் இடையே நடைபெறும் தாக்கம் கருநாட்டப் பிரதியீடாகும்.
(c) தாக்கு பொருட்கள் $H_2N-C_6H_2Br_2-NH_2$ ஐயும் $C_6H_5-\overset{+}{N_2}Cl^-$ ஐயும் ஒருமிக்க கலந்து வெப்ப நிலையை $0^{\circ}C-10^{\circ}C$ இற்கும் பேணுவதன் மூலம் மேற்படி சேர்வையைத் தொகுக்கலாம்.
(d) சேர்வைகள் $C_6H_5-NH_2$ ஐயும் $C_6H_5-\overset{+}{N_2}Cl^-$ ஐயும் ஒருமிக்கலந்து பின்னர் புரோமின் நீரைச் சேர்ப்பதன் மூலம் மேற்படி சேர்வையைத் தொகுக்கலாம்.

50. $HO-C_6H_4-C\equiv C-H$ எனும் சேதனச் சேர்வைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது/ சரியானவை?
(a) இச் சேர்வை $CH_3MgBr$ உடன் தாக்கம் புரிந்து $CH_4$ இனைக் கொடுக்கும்.
(b) இது கார $KMnO_4$ உடன் தாக்கம் புரிந்து பெறப்படும் விளைவு அமிலப்படுத்தப்படும்போது வெள்ளை வீழ்படிவு தோன்றும்.
(c) $Br_2$ நீருடன் தாக்கம் புரியும்போது $Br^-$ இலத்திரன் நாடியாகத்தொழிற்படுவதுடன் இலத்திரன் நாட்டகூட்டல் போன்று பிரதியீடும் நடைபெறும்.
(d) $-OH$ கூட்டத்தை அடையாளங் காண்பதற்கு Na இனைப் பயன்படுத்தலாம்.

*வினா 51 இருந்து 60 இற்கான அறிவுறுத்தல்கள் .*

| தெரிவுகள் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தருவது. |
| (2) | உண்மை | உண்மையாகவிருந்து முதலாம் கூற்றுக்கு திருத்தமான விளக்கத்தை தராதது. |
| (3) | உண்மை | பொய் |
| (4) | பொய் | உண்மை |
| (5) | பொய் | பொய் |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 51. | $BF_4^-$ இல் காணப்படும் நான்கு B-F பிணைப்புகளும் ஒத்தவை. | $BF_4^-$ இல் ஈதற் பிணைப்பு உருவாகும் போது இரு இலத்திரன் களையும் $F^-$ வழங்குகின்றது. |
| 52 | $CHCl_3$ ஐயும் $CH_3COCH_3$ ஐயும் கலக்கும்போது கரைசலின் வெப்பநிலை குறைவடையும். | $CHCl_3$ இல் காணப்படும் H இற்கும் $CH_3COCH_3$ இல் காணப்படும் $>C=O$ கூட்டத்திற்கும் இடையில் H— பிணைப்பு உருவாகும். |
| 53 | $Al_2O_3(S)$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறையை பரிசோதனை ரீதியாக நேரடியாகத் துணியமுடியும். | Al(S) இற்கும் $O_2(g)$ இற்கும் இடையில் நடைபெறும் தாக்கத்தில் இருந்து $Al_2O_3(S)$ இனை இலகுவில் தயாரிக்க முடியும். |
| 54 | $AgNO_3(aq)$ இற்கும் KBr(aq) இற்கும் இடையிலான நியமிப்பில் $K_2CrO_4(aq)$ இனைக் காட்டியாகப் பயன்படுத்தலாம். | AgBr இன் $K_{sp}$ $Ag_2CrO_4$ இன் $K_{sp}$ இலும் குறைவாகும். |
| 55 | $Na2CO_3$ உற்பத்தியின் போது சோல்வே கோபுரத்தில் தாழ்வெப்பநிலை பேணப்படும். | சோல்வே கோபுரத்தில் உயர் வெப்பநிலை பயன்படுத்தப்படின் சூழல் மாசுறல் நடைபெறும். |
| 56 | $CH_3CN$ உயர் இருமுனைவுத் திருப்பு திறனைக் காட்டும். | $CH_3CN$ உயர் கொதிநிலையைக் கொண்டிருக்கும். |
| 57 | Propyne இன் அமில வலிமை Propane இலும் அதிகமாகும். | $CH_3C\equiv C^-$ அயனின் உறுதி $CH_3CH=C^-$ அயனின் உறுதியிலும் அதிகமாகும். |
| 58 | $ClCH_2CHO$ இல் கருநாட்ட கூட்டல் சார்பான இராசயன் தாக்கவீதம் இலும் $CH_3CHO$ இலும் உயர்வாகும். | காபனையில் கூட்டத்தில் காணப்படும் C அணுவின் இலத்திரன் பற்றாக்குறை Cl கூட்டத்தால் அதிகரிக்கப்படும். |
| 59 | $HgCl_2(aq)$ உடன் HCOOH வெள்ளைவீழ்படிவைக்கொடுக்கும். | HCOOH ஒட்சியேற்றியாகத் தொழிற்படும் . |
| 60 | $MnO4^-$ அயனின் வடிவம் நான்முகியாகும். | $MnO4^-$ அயன் தனிச்சோடி இலத்திரன்கள் எதனையும் கொண்டிராது. |

# நோத்முதல் கோபல்லவா வரை 35

### சமவாய சம்பந்த மகா நாடு

ஐந்தாவது பிரமாணம் கண்டிப் பொது மக்களின் மதிப்புக்குரியபுத்தசமயமும் குருமாருடைய கௌரவமும் அவர்களுடைய பழையகலாசார அநுட்டானங்கள் சம்பிரதாயங்கள் யாவும் மதிப்புடன் பேணப்படும் எனக் கூறிற்று. ஆறாவது ஏழாவது பிரமாணங்கள் நாட்டில் சரீரத் தண்டனை குரூரச் செயல் என்பன நீக்கப்பட்டதென்றும், கொலைத்தண்டனை முறையாக விசாரணை செய்யப்பட்ட பின் ஆள்பதி அவர்களின் ஆணையின் வண்ணம் மாத்திரம் விதிக்கப்படும் எனவும் கூறின. எட்டாவது பிரமாணம் மேலே கூறிய வற்றுக்கு முரணில்லாத வகையில் சிறிய அழிவழக்குகளும் பழி வழக்குகளும்பழைய முறைப்படி விசாரித்து நீதிவழங்கப்படும்எனநுதலிற்று. ஒன்பதாவது பிரமாணம் கண்டியரல்லாதாருக்குக் கண்டியில் நீதி வழங்கும் அதிகாரம் ஆள்பதியின் அனுசரணையில் இருக்கும் என்பதை கூறிற்று . பத்தாம் பிரமாணம் இச் சமவாய சம்பந்த மகாநாட்டின் தீர்மானங்கள் பிரமாணங்கள் முந்திய பிரகடனங்கள் ஆணைகள் ஆகியவற்றை விட மேலானஅதிகாரம் உடையவை என்பது நுதலிற்று. பதினொராவது பிரமாணம் கண்டி நாட்டு வரிகள் , வருமானங்கள் புதிய அரசாங்கத்தில்சேர்க்கப்படும் என்றும் அது கண்டி நாட்டைத் திருத்துவதற்கு முதற் பயனாகும்என்றும் கூறிற்று. பன்னிரெண்டாம் பிரமாணம் நாட்டு மக்களுக்கு வசதியான முறையில் கண்டி நாட்டு வர்த்தகஞ் சம்பந்தமான முறையை ஆள்பதி அவர்கள் மாட்சிமை தங்கிய மன்னருக்குத்தகவுரை எழுதுவார் என்றும் அவ் வண்ணமே தாம் மேற்கொள்வார் என்றும் கூறிற்று. இவை யாவும்

### மீள் பார்வை

அரசாங்க மொழி பெயர்ப்பாளர் டொயிலிக்கும் அரசாங்க உதவிக் காரியதரிசி யேம்ஸ் சதர்லன் அவர்களுக்கும் முன்னிலையில் ஆள்பதி றொபேட் பிறவுண்டிக் அவர்களாலும் கண்டிப் பிரமுகர்களாலும் கையொப்பம் இடப்பட்டன. பிரமுகர் சார்பில் எகிலப்பொல, மொலிகொட, பிலாமை மொனறவல, றத்வத்தை, துலவி மிலாவை, கலகம், கலகொட, ஆகிய பெரியார்கள் ஒப்பமிட்டனர்.

கண்டியின்பரிபாலன அலுவல்களைக் கண்காணிப்பதற்கு டொயிலி ஸ்தானிகராக நியமிக்கப்பட்டான் . அவனுக்கு உதவியாக நியாய விசாரணைஆணையாளர், நீதிஅலுவல் ஆணையாளர், படைத்தலைவர்ஆகிய உத்தியோகத்தர் இருந்தார்கள். உள்நாட்டு அலுவல்களைக் கவனிப்பதற்குப் பழைய முறையிலமைந்த அதிகாரியாக மொலிகொட நியமிக்கப்பட்டான்.

அதிகாரி நியமனம்ஆங்கிலேயருக்குப் பெரிய பிரச்சினையாயிருந்தது. எகிலப் பொல தன் மனைவி மக்களை உற்றார் உறவினரை இழந்து இன்னல்களுக்கு ஆளாகியதையும் பொருட்படுத்தாது படை எடுப்பின் போதும் மன்னனைச் சிறை செய்தபோதும் ஆங்கிலேயருக்கு அருந்துணையாய் நின்றதைக் கூறி நின்றான்.

மொலிகொட தான் கண்டியரசனின்கீழ்க் கடமையாற்றிய காலத்திலும் கூட ஆங்கிலேயருக்குஅந்தரங்க ஆப்த நண்பனாய் இருந்தமையும் மறைபல முகமாக உதவிகள் செய்தமையும் ஆங்கிலேயர் படை எடுத்துக் கண்டிக்குப் போனபோது அவர்கள் படைகளுக்குப்பெருஞ் சோறளித்த வெற்றியையும் கூறிநின்றான்.

இரு அதிகாரிகளும் ஆளுக்கு ஆள் விரோதியாய் இருந்தமையால்ஏற்றத் தாழ்வான உத்தியோகத்தையும்பெறவும் விரும்பவில்லை.



கண்டியரசன் ஆங்கிலேயருக்குக் கடைசியாகச் சொன்ன வசனமும் ஆங்கிலேய ருக்கு ஞாபகத்துக்கு வந்தது.

எகிலப்பொல யையும் மொலிகொட யையும்நம்பாதீர்கள். அவர்கள் என்னை

**க.சி.குலரத்தினம்**

எமாற்றியவர்கள் உங்களை ஏமாற்றுவதற்குத் தயங்கமாட்டார் . மொலிகொட முதலதிகாரியாக நியமிக்கப்பட்டதால் எகிலப்பொல தனக்கு வேறொரு உத்தியோகமும் வேண்டாம் என விரக்தி யோடு விலத்தியிருந்தான்.

(தொடரும்)

# எண்ணெய் விலை அதிகரிப்பும் அதன் தாக்கங்களும்

(நேற்றைய தொடர்ச்சி)

இதன்மூலம் முதலீடுகள் ஊக்கமிழத்தல் மற்றும் உற்பத்தி வீழ்ச்சியடைதல் காரணமாக தொழிலின்மை அதிகரிக்கும்.மேலும் வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடைவதோடு அதிகூடிய வெளிநாட்டுக் கடன் பழுவைக் கொண்ட நாடுகளின் கடன் பணிக்கொடுப்பனவுகள் அதிகரிக்கும். இதன் இறுதி விளைவாக தேசிய அபிவிருத்தி குறைவடைந்து பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடையும். ஆயினும் மேற்படி தாக்கங்கள் நாடுகளின் பொருளாதார பலம் கைத்தொழில்கள் பெற்றோலிய இறக்குமதி மீது தங்கியுள்ள அளவு, மாற்று வழிச் சக்திகள் உள்ளமை அல்லது இல்லாமை, ஏற்றுமதி பண்டங்க ளின் இயல்பு ஆகிய விடயங்கள் மீதே தீர்மானிக்கப்படுகின்றன.

அதேபோன்று மாற்று வலுச் சக்தி கள்-நீர் மின்சாரம், நிலக்கரி,எரிவாயு ஆகி யன உள்ள நாடுகளில் மாற்றீடுகளைப் பயன்படுத்த முடியுமாயிருக்கும்.

இதனால் எண்ணெய் விலை அதிரிப்பதனால் அபிவிருத்தி அடைந்து வருகின்றது, வலுச் சக்தியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலியத்தின் மீது தங்கியுள்ளதும் சென்மதி நிலுவை பற்றாக்குறை நிலவுகின்றதும், அதிகளவு கடன் பளுக் கொண்டுள்ளதுமான நாடுகளே மிகவும் கஷ்டமான நிலைக்கு உள்ளாகின்றன. "நைபல் கௌல்ற்" கணிப்பிட்டுள்ள படி ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 10 பொலரால் அதிகரிக்கும் போது அமெரிக்கப் பொருளா தாரம் கூட ஆண்டுக்கு 0.3% ஆல் வீழ்ச்சி யடைகின்றது.

எனவே எண்ணெயின் விலை அதிகரிப்பா னது 'அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை மட்டு மன்றி அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றது.

### எண்ணெய் விலை அதிகரிப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள்

இலங்கையின் வலுச் சக்தித் தேவையில் நூற்றுக்கு 50% விறகு எரிக்கப்படுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதோடு நூற்றுக்கு 42% பெற்றோலியத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் பெற்றோலியம் பிரதான வர்த்தக வலுச் சக்தி மூலமாகும். இலங்கை யின் பெற்றோலிய இறக்குமதியின் அளவு மற்றும் செலவு ஆகிய இரண்டும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றன. இதனை அட்டவணை மூலம் தெளிவாக்கப்படு கின்றது.

**இலங்கையின் எண்ணெய் இறக்குமதியின் அளவும் செலவும் (1997-2000)**

| ஆண்டுகள் | அளவு | பெறுமதி பீப்பாய் மில்லியன் |
|---|---|---|
| 1997 | 13 | 15 584 |
| 1998 | 16 | 13 902 |
| 1999 | 13 | 18 222 |
| 2000 | 17 | 37 697 |
| 2001 | 14 | 31 619 |
| 2002 | 17 | 40 404 |
| 2003 | 15 | 41 628 |
| 2004 | 16 | 61 434 |
| 2005 | 15 | 77 795 |
| 2006 | 16 | 106626 |

ஆதாரம் - இலங்கைமத்திய வங்கி அறிக்கை (2007)

அதாவது இலங்கையின் பெற்றோலிய இறக்குமதிச் செலவானது மொத்த இறக்குமதி செலவில் நூற்றுக்கு 16%ஆகவுள்ளது. இதன் பொருட்டுஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாள நூற்றுக்கு13% செலவிடப்படுகிறது. மாற்று வலுச்சக்தியான நீர் மின் சாரத்திற்கு கால நிலை தடையாக அமைகின் ற சந்தர்ப்பங்களில் பெற்றோலியத்தின் பொருட்டு ஏற்க வேண்டி நேரிடுகின்ற செலவு இதைவிட அதிகமாக இருக்கும்.2003இல் பெற்றோலிய இறக்குமதியின் பொருட்டு இலங்கை அமெரிக்க டொலர் 838மில்லியனைச் செலவளித்த தோடு 2004 இல் முதல்எட்டு மாதங்களில் மாத்திரம் அமெ.டொலர் 774 மில்லியனைச் செலவழித்தது. அதேநேரம் இச்செலவு 2006இல் அமெரிக்க டொலர் 2070 ஆக அதிகரித்தது. மேலும் இலங்கை ஆண்டொன்றுக்கு ஏறத்தாள 30-32 மில்லியன் பீப்பாய் பெற்றோல்உற்பத்திகளை இறக்குமதி செய்கிறது.

இலங்கை இறக்குமதி செய்கின்ற பெற்றோலியத்தின்போக்குவரத்துதுறை நூற்றுக்கு 50 %நுகர்வதோடு மின் சக்தி உற்பத்தியின் பொருட்டு நூற்றுக்கு 25%பயன்படுகிறது. ஏனைய துறைகள் எஞ்சிய25% நுகர்கின்றன. மேலும் டீசல் மற்றும் பெற்றோல் விலை அதிகரிப்பை நாம் போக்குவரத்து மற்றும் மின்சக்தி உற்பத்திதுறையினுள் தெளிவாகக்காண முடிகிறது. இலங்கை ஆண்டொன்றுக்கு 3 பில்லியன்லீற்றர் பெற்றோல், டீசல்,மண்ணெய் நுகர்கிறது. ஆதலால் ஒரு லீற்றருக்கு ஒரு ரூபாய் நிவாரணத்தை வழங்குவதாக இருப்பின் ஆண்டொன்றுக்கு நிவாரணச் செலவு ரூபா 3பில்லியன்ஆக இருக்கும். குறிப்பாக 2004 ஆம் ஆண்டினுள் அரசாங்கம் பெற்றோலிய நிவாரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் லங்கா இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கும் ரூபா 18 பில்லியனை செலவளித்துள்ளது. இந்த மொத்த நிவாரண செலவீனத்தை அரச வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஏற்க நேரிடுவ தோடுஇதன்மூலம்அரச நிதியியல் செயற்பாடுகளின் போது அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகின்றது.

மேலும் எண்ணெய் விலை துரிதமாக அதிகரித்ததைத் தொடர்ந்து மொத்த அலுவல் சார் ஒதுக்குகள் விரைவாக வீழ்ச்சி யடைகின்றன.மேலும் வெளிநாட்டின்செலவாணிக்கு உள்நாட்டுச் சந்தையில் நிலவுகின்ற அதிகளவு கேள்வியின் காரணமாக ரூபாவின் விலை வீழ்ச்சியடைந்துடொலரின்பெறுமதிஅதிகரிக்கின்றது.

பெற்றோலிய விலை அதிகரிப்பானது நாட்டின் பணவீக்க வேகம் அதிகரிப்பிலும் 2வீதத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. முதலாவதாக செலவாணி வீதப் பெறுமதி குறைவடைவதால் இறக்குமதிப்பண வீக்கத்தின் ஊடாகவும் உள்நாட்டு ரீதியில் அரிசி, பருப்பு , சீனி,பால்மா,எரிவாயு,பேரூந்துக் கட்டணங்கள் மற்றும் ஒட்டுமொத்தமாக அனைத்து நுகர்வுப் பண்டங்கள் ,மூலதனப்பண்டங்கள் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்தல் தொடர்பில் பெற்றோலிய விலை கூடுதலான அளவு தாக்கத்தை ஏற்பபடுத்தியுள்ளது.2001ஆம் ஆண்டில் நூற்றுக்கு 14.3 %ஆகவும் 2002 ஆம் ஆண்டில் நூற்றுக்கு9.6 %ஆகவும் 2003ல் நூற்றுக்கு 6.3%ஆகவுமிருந்த அலுவல்சார் விலைச்சார் சுட்டெண் 2004 ஒக்டோபர்ஆகும்போது நூற்றுக்கு 9.3% வரை அதிகரிப்பதற்குஎண்ணெய் விலை அதிகரிப்பு காரணமாக அமைந்தது. இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடை வதற்கு எண்ணெய் விலை முக்கிய காரணமாக அமைந்தது. பெற்றோலிய விலை அதிகரிப்பிற்கு நிகரான வீதத்தில் விலை அதிகரிப்பு நடைபெறும் என்பதால் அதன் மூலம் உற்பத்திச் செலவுகளும் அதிகரிக்கின்றன.இறுதியாக கைத்தொழில் துறை போக்குவரத்துத்துறை வலுச்சக்தி உற்பத்தி ஆகிய அனைத்துத் துறைகளிலும் நடைபெறுகின்ற இப் பாதகமான எதிர்விளைவுகள் மூலம் தேசிய உற்பத்திகள் குறைவடைவதிலும் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி யடைவதிலும் எண்ணெய் விலை அதிகரிப்பு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. (தொடரும்)

**சுந்தரராஜா சுமன்**
பொதுக்கலை,
3ஆம் வருடம்(2008),
யாழ்.பல்கலைக்கழகம்.

# காலத்திற்கு ஏற்றவாறு கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும்-கல்வி அமைச்சர்

தெற்காசியாவிலேயே கல்வித்துறையில் இலங்கையே முதன்மைபெற்ற நாடாக புத்திஜீவிகளினால் நோக்கப்படுகிறது. ஆசிய நாடுகள் அனைத்துடனும் ஒப்பிடுகையில் எழுத்து வீதம் கூடிய நாடாக இலங்கையேஉள்ளது. கல்வியமைச்சர் என்ற ரீதியில் இது குறித்து நான் மகிழ்ச்சிஅடைகிறேன். இவ் வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற விதமாக எமது கல்வித் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தி எமது மாணவ சமுதாயத்தை நவீன உலகை நோக்கி பயணிக்க வைக்க வேண்டும்எனவும்அதன்முதற்படியே இன்டெல்கணணி அறிமுகமாகும் என்றும் அவர் கூறினார்.

இன்டெல் நிறுவனம் கல்வியமைச்சுடன் இணைந்து மாலபே ஸ்ரீ ராகுல பெண்கள் மகாவித்தியாலயத்தில் இலங்கையின் முதலாவது மாணவர் கணணி இன்டெல் ஆய்வு கூடத்தை ஆரம்பித்து வைத்தது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று ஓர் சந்தோஷமான நாள். காரணம் கிராம மட்டத்தில் இந்தப் பாட சாலை மாணவியரின் தொழில்நுட்பம் கருதி மாணவர் கையடக்க இன்டெல் கணணி ஆய்வு கூடத்தை இலங்கையில் முதன் முதலாக ஆரம்பித்து வைக்கும் நன்னாள்.

இரண்டாம் கல்வியாக தொழில்நுட்பக் கல்வி தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.இது மாணவருக்கானவிஷேடகல்வித்திட்டமாகும். ஏனைய நாடுகளில் இது ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இந்தப் புதிய முன்னெடுப்பானது இலங்கையிலே கல்விப் புரட்சியினை ஏற்படுத்தி உலகளவிலானஇணையத்திற்குரிய வகுப்பறைச்சுற்றுச் சூழலினை ஆரம்பித்து வைக்கின்ற இந்தப் பரந்த தளத்திலான தகவலினை அடைவதனால் மாணவர்களது அறிவுப் பசி சந்தேகமில்லாமல் உயர்வடையச் செய்வதுடன் எதிர்கால சவால்களுக்கேற்ப தயார் படுத்துவதற்கும் உதவுகின்றது.

2010 ஆம் ஆண்டுக்குள் 5 ஆயிரம் பாடசாலைகளை உருவாக்கும் திட்டம் என்னிடமுள்ளது. வெகு விரைவில் பிரதேச ரீதியாக இன்டர்நெட் வசதியுடனான கணனி ஆய்வு கூடங்கள் நிறுவப்படும். எனவே மாணவர்களாகிய நீங்கள்நாம்ஏற்படுத்தித்தரும் இதுபோன்ற நல்ல திட்டங்களை நன்கு பயன்படுத்தி கல்வித் துறையில் சிறப்புற்று விளங்கவேண்டும் என்றார். ஓ

# வேல் இருந்த இடத்தில் விகாரை

## கதிர்காமம் கதிரமலை உச்சியில் சம்பவம்

## இந்துக்கள் மனம் புழுங்குகின்றனர்

(கொழும்பு)

வேல் இருந்த இடத்தில் விகாரை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

கதிரமலை உச்சியில் அரங்கேறியுள்ள இவ் இன விரோதச் சம்பவம் பற்றி உணர்வுள்ள இந்துக்கள் மனம் புழுங்குகின்றனர்.

கடந்த 2 வருடங்களாக இவ் விகாரை கட்டப்பட்டு வந்தது.

அப்போதும் தமி ழின அரசியலாளர்கள் குரல் கொடுக்கவில்லை. இப்போதும் குரல் கொடுக்க வில்லை.

காலாகாலமாக அங்கிருந்த வேல் இன்று பின்னோக்கி நகர்த்தப்பட்டுள்ளது. வேலிருந்த இடத்தில் பாரிய விகாரையும் முன்னால் புத்த சிலையும் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டுள்ளது. ஓ

# 'சுழல் தளபதி' அஜந்த மெண்டிஸ்



சர்வதேச கிரிக்கெட் அரங்கில் புதிய சுழல் சூறாவளியாக புறப்பட்டிருக்கிறார் அஜந்த மெண்டிஸ். ஆசிய கோப்பை இறுதிப் போட்டில் இந்திய அணியை புரட்டி எடுத்த இவர் இலங்கை அணி சம்பியன் பட்டம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். பந்துவீச்சில் நமது சச்சினைபோல் வெரைட்டி காண்பிப்பதே இவரது பிளஸ். லெக் ஸ்பின்னரா அல்லது ஓப் ஸ்பின்னரா என்று கணிப்பதற்குள் துருப்பாட்டவீரர்கள் காலியாகி விடுக்கின்றனர். இதனை இந்திய அணித்தலைவர் தோனியே ஒப்புக்கொண்டுள்ளார். அடுத்து நடக்க உள்ள டெஸ்ட் தொடரிலும் மெண்டிஸின் மந்திர பந்துவீச்சை எதிர்பாக்கலாம். இவருக்கு பக்கபலமாக சூழல் மன்னர் முரளிதரனும் இருப்பதால் இந்திய அணி மிகுந்த உஷாராக இருக்க வேண்டும்.

இலங்கை ஜாம்பவான் துலீப் மெண்டிஸ் பிறந்த மெரட்டுவா கிராமத்தில் தான் அஜந்த மெண்டிசும் பிறந்தார். இளம் பருவத்தில் இருந்தே கிரிக்கெட் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இலங்கை இராணுவத்தின் கிரிக்கெட் அணிக்காக தேர்வு செய்யப்பட்ட இவர் தனது சுழல் திறமையை சிறப்பாக காட்டினார். விரும்பினாலும் கிரிக்கெட் வீரர்களின் விருப்பம் வேறாகவுள்ளது.


இதையடுத்து இலங்கை அணியில் வாய்ப்பு தேடி வந்தது. கடந்த ஏப்ரலில் நடந்த மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிரான தொடரில் அறிமுகமானார். சமீபத்தில் பாகிஸ்தானில் நடந்த ஆசிய கோப்பை தொடர் தான் இவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது. இறுதிப்போட்டியில் இந்திய துடுப்பாட்ட வீரர்களை திணறடித்த மெண்டிஸ் 13 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 6 விக்கெட் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் தொடர் நாயகன் விருதுகளை வென்ற இவரை புகழாதவர்களே இல்லை. பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரம் கூறுகையில், இறுதிப்போட்டியில் மெண்டிஸ் சுழல் ஜாலத்தை பார்த்து பிரமித்து போனோம். இப்படி ஒரு அசத்தலான பந்து வீச்சாளரை நான் பார்த்ததே இல்லை என்றார்.

**கெரம்போல் புதுமை**

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட் (735) வீழ்த்தி சாதனை நாயகனாக திகழும் முரளிதரனை தொடர்ந்து மெண்டிசும் கலக்கி வருவதால் இலங்கை அணி இரட்டை மகிழ்ச்சியில் உள்ளது. இந்தியாவின் சச்சினோடும் மெண்டிஸை ஒப்பிடலாம். இருவரும் அனைத்து வகையிலும் பந்துவீசுவதில் கெட்டிக்காரர்கள். பகுதி நேர பந்துவீச்சாளரான சச்சின் இணைப்பாட்த்தை பிரிப்பதில் கில்லாடி. மெண்டிசோ எதிரணியின் முதல் தரவரிசையை தகர்க்கும் பிரதான பந்துவீச்சாளராக உள்ளார். பிளிப்பர், கூக்ளி, டாப்- ஸ்பின்னர் என அனைத்து விதமான டெக்னிக்கையும் பயன்படுத்துகிறார். போட்டிகளில் கெரம் போல் என்ற புதுமையான பந்துவீச்சு முறையை கையாண்டு வருகிறார். அதாவது கெரம் வீரரை போல் தனது விரல்களால் பந்தை சுழற்றி வீசுகிறார். முரளிதரனிடம் தூஸ்ரா மட்டுமே பலமாக இருந்தது.

ஆனால் மெண்டிஸிடம் நிறைய பிரமாஸ்திரங்கள் உள்ளன. தற்போது 23 வயதான மெண்டிஸ் 8 ஒரு நாள் போட்டிகள் மட்டுமே விளையாடியுள்ளார். இன்னும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவில்லை இவரையும் முரளியையும் ஒப்பிட்டு பேசுகின்றனர். இது குறித்து அணித்தலைவர் ஜெயவர்தனா கூறுகையில் முரளிதரனோடு ஒப்பிடுவது சரியாகாது. அவர் அனுபவமிக்கவர் மெண்டிஸ் இப்போது தான் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்துள்ளார். இன்னும் நிறையகற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்றார். அவுஸ்திரேலியாவின் வோர்ன் ஓய்வு பெற்றுவிட்டார். முரளிதரன், கும்ளே ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர். எனவே சர்வதேச அரங்கில் சூழல் ராஜ்ஜியம் நடத்த மெண்டிஸுக்கு வாய்ப்பு அதி கம்.

# அணித்தலை[...] முன்னாள் அ[...]



சோயிப் மலிக் பலுவீனமான அணித் தலைவரா[க] இருக்கிறார் என பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்சமாம் ஓய்வை அடுத்து பாகிஸ்தான் அண[ி]யின் தலைவராக சோயிப் மலிக் நியமிக்கப்பட்டார். இவரது தலைமையின் கீழ் பாகிஸ்தான் இருபது -20 உலக கோப்பை தொடரில் இறுதிப்போட்டிவரை முன்னேறியது.

இருந்த போதிலும் கோப்பையை இந்தியாவிட[ம்] பறிகொடுத்தது. சமீபத்தில் சொந்த மண்ணில் நடந்த ஆசிய கோப்பை தொடரில் இறுதிப் போட்டிக்கு கூட முன்னேற முடியாமல் பரிதாபமாக காட்சியளித்தது. தோல்விக்கு பின்னர் சோயிப் மலிக் 'தேர்வு குழுவி[...]

# ஆசியாவின் நம்பர் -1 அணித்தலைவர் தோனி!



இந்திய அணியின் எழுச்சி நாயகன் மகேந்திர சிங்தோனி தனது சிறப்பான துடுப்பாட்டத்தால் திறமையான தலைமை பொறுப்பாலும் இந்திய அணிக்கு இருபது- 20 உலக கோப்பையை பெற்று தந்தார். தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப் படுத்திய இவர் ஆசிய மண்ணில் சிறப்பாக விளையாடிய அணித்தலைவர் என்ற பெருமையை தன் வசம் சேர்த்து கொண்டார். ஆசிய மண்ணில் சிறப்பாக விளையாடியஅணித் தலைவர்கள் பற்றிய சிறு அலசல்.

இருபது -20 உலக கோப்பை வெற்றி மற்றும் அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண் ணில் நடந்த முத்தரப்பு தொடரில் வீழ்த்தியது போன்ற சரித்திர சாதனைகள் தோனியின் புகழை வெளியில் கொண்டு வந்தன. இதையடுத்து ரசிகர்கள் கூட்டம் மட்டுமல்ல விளம்பர நிறுவனங்களும் இவரை சுற்றுவதால் விளம் பரம் மூலம் அதிக வருமானம் பெறும் இந்திய வீரர்கள் வரிசையில் சச்சினிடம் இருந்து முதலிடத்தை பறித்து கொண்டார்.

தோனி பொறுப்பான அணித்தலைவர் மட்டுமல்ல சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரர் என்பதையும் மறுக்க முடியாது. 2005 இல் ஜெய்ப்பூரில் நடந்த இலங்கைக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 183 ஓட்டங்கள் எடுத்து அதிக ஓட்டங்களை சேர்த்த விக்கெட் கீப்பர் என்ற உலக சாதனை படைத்தார். ஆசிய மண்ணில் சுப்பர் ஆட்டத்தை வெளிப் படுத்திய அணித்தலைவர்கள் வரிசையில் தற்போது அதிக சராசரியுடன் முதலிடத்தை பிடித்துள்ளார். இவர் ஆசிய மண்ணில் இதுவரை 27 போட்டிகளில் அணித்தலைவராக பங்கேற்றுள்ளார். அதில் ஒரு சதம் 6 அரைசதம் உட்பட 931 ஓட்டங்கள் (சராசரி 58.58) எடுத்துள்ளார். இவரை தவிர்த்து வேறு எந்த அணித் தலைவரும் ஆசிய மண்ணில் சராசரியாக 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தது கிடையாது. இரண்டாவது இடத்தில் பாகிஸ்தான் அணித் தலைவர் சோயிப் மலிக் இருக்கிறார். இவர் 28 போட்டியில் 1 000 ஓட்டங்கள் எடுத்திருந் தாலும் சராசரியில் தோனியை விட மிகவும் பின் தங்கியுள்ளார். மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தில் நியூசிலாந்தின் மார்டின் குரோ மற்றும் அவுஸ்திரேலியாவின் கிரெக் செப்பல் இருக்கின்றனர்.

**ஆசிய மண்ணில் சிறப்பாக விளையாடிய அணித்தலைவர்கள்.**

| அணித்தலைவர் | ஒருநாள் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|---|
| தோனி(இந்தியா) | 27 | 931 | 58.18 |
| சோயிப் மலிக் (பாகி) | 28 | 1000 | 45.45 |
| குரோ(நியூசி.) | 44 | 1638 | 45.38 |
| கிரெக்செப்பல் (ஆஸி) | 49 | 1718 | 45.21 |
| பொன்டிங் (ஆஸி) | 168 | 6231 | 44.82 |
| இன்சமாம் (பாகி) | 89 | 2794 | 44.34 |
| டிராவிட் (இந்தியா) | 79 | 2658 | 42.19 |
| சிமித்(தெ.ஆ.) | 111 | 4152 | 41.10 |
| மியாண்தத் (பாக்) | 61 | 1867 | 40.58 |
| லாய்ட்(மேதீ) | 84 | 1916 | 39.91 |

அவுஸ்திரேலியாவின் வெற்றி அணித் தலைவர் பொன்டிங்கிற்கு சராசரி அடிப்படையில் ஐந்தாவது இடம் மட்டுமே கிடைத்துள்ளது. இருந்தாலும் ஆசிய மணணில அணித் தலை வராக அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற சாதனையை இவர் தன்வசம் வைத்து ஆறு தல் தேடி கொண்டார். ஆசிய மண்ணில் அதிக் சதம் கடந்த அணித் தலைவரும் இவர் தான். இவர் இங்கு அணித்தலைவராக 168 போட்டியில் பங்கேற்று 18 சதம் ,35 அரைசதம் உட் பட 6231 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.



பாகிஸ்தானின் இன்சமாம் 89 போட்டியில் 2 சதம் 19 அரைசதம் உட்பட 2794 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரியாக 44. 34 ஓட்டங்கள் வைத்திருக்கும் இவர் 6ஆவது இடத்தையும் இந்தியாவின் டிராவிட் 7ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். டிராவிட் 79 போட்டியில் 2 சதம் 25 அரைசதத்துடன் 2658 ஓட்டங்கள் சேர்த்துள்ளனர். தென்னா பிரிக்காவின் சிமித் பாகிஸ்தானின் மியாண்தத் மற்றும் மேற்கிந்திய தீவுகள் லோய்ட் ஆகியோரும் ஆசிய மண்ணில் சிறப்பாக விளையாடிய முதல் 10 அணித்தலைவர் வரிசையில் இடம் பெற்றுள்ளனர்.

# அதிக வருமானம் ஈட்டும் விளையாட்டு வீரர் டைகர் வுட்ஸ்

விளையாட்டால் அதிக வருமானம் ஈட்டும் வீரர்களில் அமெரிக்காவைச் சேர்ந்த கொல்ப் விளையாட்டுவீரர் டைகர் வுட்ஸ் முதலிடத்தைப் பிடித்துள்ளார். 32 வயதாகும் வுட்ஸ் ஒவ்வொரு போட்டிகளிலும் கோடிக்கணக் கான வருமானம் ஈட்டும் முன்னிலை வீரராக திகழ்கிறார்.

அவர் 14 முறை தலை சிறந்த போட்டி களில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். அதனால் அவரது மொத்த வருமானம் இதுவரை எந்த வீரரும் எட்டாத நிலையை அடைந்துள்ளது.

டைகர் வுட்ஸ் கடந்த 2007ஆம் ஆண்டில் மாத்திரம் விளையாட்டின் மூலம் பெற்ற தொகை 115 மில்லியன் டெலர்களா கும்.

அதுமட்டுமல்லாது விளம்பரங்களின் நாயகனாகவும் பார்க்கப்படும் டைகர் வுட்ஸ் அதனால் மட்டும் இதுவரை 750 மில்லியன் பொலர்களை ஈட்டியுள்ளார். அவர் பங்கேற்ற விளம்பரத்தால் நிறுவனங்களும் கோடிக்கணக்கில் லாபம் அடைந்து வருகின்றன. அவரை ஒப்பந்தம் செய்துகொண்ட நைட் நிறுவனம் கடந்த ஆண்டு மட்டும் ரூபாய் 2520 கோடிக்கு பொருள்களை விற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

டைகர் வுட்ஸ் இதுவரை 50 கொல்ப் தொடர்களில் பங்கேற்றுள்ளார். இதன் மூலம் மிகக்குறைந்த வயதில் அதிகப் போட்டித் தொடர்களில் பங்கேற்ற வீரர் என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

அதேபோன்று சாம்பியன் ஷிப் பட்டங்களை கைப்பற்றுவதிலும் விரை வில் அவர் உலக சாதனை படைக்கவுள்ளார். இதுவரை 14 சாம்பியன் ஷிப் பட்டங்களைப் பெற்றுள்ள வுட்ஸ், ஜேக் நிக்கொலஸ் சாதனையை (18 பட்டங்கள்) முறியடிப்பார் என எதிர்பாக்கப்படுகிறது.

உலகப் புகழ் பெற்ற போர்ப்ஸ் சஞ்சிகை ஆண்டு தோறும் பல்வேறு பிரிவுகளில் பணக்காரர்களை பட்டியல் இட்டு வருகிறது. இந்த ஆண்டு அதிக பட்ச வருவாய் ஈட்டும் விளையாட்டு வீரர்கள் பட்டியலிலேயே வுட்ஸ் முதலிடத்தைப் பிடித்தார்.

வுட்ஸுக்கு அதிக படியாக இங்கிலாந்து கால்பந்துவீரர் டேவிட் பெக்கம் இரண்டாவது



இடத்தில் காணப்படுகிறார். பெக்கம் விளையாட்டின் மூலம் 65 மில் லியன் டொலர்களாகும்.

இதன் படி தொடர்ந்து புகழ் பெற்று வரும் டைகர் வுட்ஸ் 2010ஆம் ஆண்டில் ஒருபில்லியன் டொலருக்கு சொந்தக் காராகி விடுவார் என்று போர்ட்ஸ் இதழ் கணித்துள்ளது.

# ...மையில் மலிக் பலவீனமானவர் ...னித்தலைவர் அக்ரம் பாய்ச்சல்

நான் கேட்ட அணியை தரவில்லை அத னால் தான் வெற்றி பெற முடியவில்லை' என்றார். இந்நிலையில் சோயிக் மலிக் பொறுப்புணர்ந்து விளையாடவில்லை அவர் பலவீனமான அணித்தலைவராக இருக்கிறார் என முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் ஆசிய கோப்பைத்தொடரில் தேர்வுக்குழுவினர் கொடுத்த அணியுடன் தான் பங்கேற்றதாகவும் அதனால் தான் கோப்பைவெல்லமுடிய வில்லை என்றும் சோயிக் மலிக் கூறியுள்ளார்.

பங்களாதேஷில் நடந்த முத்தரப்பு தொடரில் கோப்பை வென்ற அதேஅணி தான் ஆசிய கோப்பைத் தொடரிலும் பங்கேற்றது. இதனால் தேர்வுக் குழுவினரை குறை சொல்ல முடியாது. சோயிக் மலிக் திடமான முடிவெடுக்க தவறிவிட்டார்.

**திறமையில்லை**

அணித்தலைவர் என்பவர் மற்றவர் களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆரம்பத்தில் அவரிடம் நிறையத்திறமை இருப்பதாக உணர்ந்தேன்.

தற்போது அதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சிம் பாவே அணிக்கு எதிரான போட்டியில் 10 ஓவர்கள் பந்துவீச்சு செய்கிறார். பங்களாதேஷ் அணி என்றால் 8 ஓவர்கள் வீசுகிறார். ஆனால் முன்னணி அணிக ளுக்கு எதிரான போட்டியில் பந்து வீசுவதில்லை. இது போன்ற நடவடிக்கைகளை யாரும் கவனிக்க மாட்டார் கள் என அவர் நினைத்து வருகிறார்.

...க்களிற்கு இது அனைத்தும் தெரியும் அமீர்



சொகைல், வாக்கார் யூனிஸ், ஜாவித் மியா ன்தத் ஆகியோர் சிறந்த அணித் தலை வராக போட்டியில் வெற்றியாளராகவும் யொலித்த வர்கள் அவர்கள் போர்மில்லாமல் தவிர்க் கும் போது ஆதரவு தருவேன். சோயிக் மலிக் நிறையக்கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

அசாத் ரசாப்லீக் போட்டியில் மூன்று விக்கெற் வீழ்த்தினார். ஆனால் அடுத்த போட்டி யில் அவருக்கு வாய்ப்புக்கிடைக்கவில்லை. இதற்கு சோயிப் மலிக் தான் முழுக் காரணம் இதற்கும் தேர்வுக்குழுவினர் மீது பழி போட முடியாது இவ்வாறு அக்ரம் தெரிவித்தார்.

# சம்பியன்ஸ் தொடர் வோட்ஸன் தயாராம்

பாகிஸ்தானில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் தொடரில் கலந்துகொள்ளத் தயாராக இருப் பதாக அவுஸ்திரேலிய வீரர் ஷேன்வோட்ஸன் அதிரடியாக அறிவித்துள்ளார்.

தொடர்ந்து காயங்களால் அணியில் நிரந்தர இடமில்லாமல் அவதிப்பட்டு வந்தவர். அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோட்ஸன் இந்தி யாவில் நடந்த ஐ.பி.எல். தொடரில் தொடர்நாய கனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதேநேரத்தில் அவுஸ்திரேலிய ஆரம்ப ஆட்டக்காரர் ஹைடன் காயத்தினால் மேற் கிந்திய தீவுகள் தொடரிலிருந்து விலகினார். அந்த வாய்ப்பு வோட்ஸனுக்கு வழங்கப்பட் டது. கிடைத்த வாய்ப்பை கெட்டியாகப் பிடித் துக்கொண்ட வோட்ஸன் அதிலும் தொடர்நாய கனாக அசத்தினார். இதனிடையே பாகிஸ் தானில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடக்க இருக் கும் சம்பியன்ஸ் தொடரை பாதுகாப்பு அச்சுறுத் தல் காரணமாக புறக்கணிக்கப் போவதாக அணித்தலைவர் பொண்டிங் உள்ளிட்டவீரர் கள் வெளிப்படையாக அறிவித்தனர். இதற்கு ஆதரவாக இங்கிலாந்து, தென்னா பிரிக்க வீரர்களும் கருத்துத்தெரிவித்தனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய பத்திரி கைக்கு அளித்த பேட்டியில் வோட்ஸன் கூறி யது, எனது நாட்டுக்காக கிரிக்கெட் ஆடுவதை விரும்புகிறேன். கடந்த ஆண்டு எனது கிரிக் கெட் வாழ்க்கை சற்று முன்னேறியுள்ளது. கடு மையாக முயற்சி செய்து நல்ல ஆட்டத்தை



வெளிப்படுத்துவேன்.எனது அணிக்காக எங்கு சென்று விளையாடுமாறு கூறினாலும் விளையாட தயாராக இருக்கிறேன். பாது காப்பு பற்றிய கவலை இல்லை.

ஐ.பி.எல் தொடர் காயத்தினரல் நீண்ட ஓய்வில் இருந்த எனக்கு உடல் திறனை நிருபிக்க உதவியது மேற்கிந் தியதீவு தொடர் எனக்கு மன உறுதியை வழங்கியுள்ளது. இப்போது துடுப்பாட்டம், பந்து வீச்சில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளேன். இவ்வாறு வோட்ஸன் கூறினார்.

# இங்கிலாந்து லீக்

ஐ.பி.எல் போட்டிகளுக்கு போட்டியாக புதிய லீக் போட்டியை நடத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் சபை ஆரம்பித்த ஐ.பி.எல் அமைப்பு முதலாவது இருபது-20 நடத்திய தொடர் மாபெரும் வெற்றி பெற்றது. இதனையடுத்து உலகக் கிரிக்கெட்டில் இந்தியாவின் ஆதிக்கம் வலுப்பெற்றுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஐ.பி.எல்லுக்கு போட்டியாக புதிய லீக் போட்டி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை பற்றிய விபரம் இங்கிலாந்து பத்திரிகைகளில் கசிந்துள்ளது.

ஒன்பது அணிகளாக பிரிக்கப்பட்டு இங்கிலாந்திலுள்ள ஒன்பது டெஸ்ட் மைதானங்களில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் உள்நாட்டு வீரர்களும் இடம்பெறுவார்கள். வீரர்கள் ஏல அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

2010 ஆம் ஆண்டில் இந்தப்போட்டி நடத்தப்படவுள்ளது. பரிசுத் தொகையாக கோடிக்கணக்கான பவுண்ஸ்கள் வழங் கப்படவுள்ளன. இங்கிலாந்து பிரிமியர் லீக் எனும் பெயரில் இந் தப்போட்டிகள் நடத்தப்படலாம் என தெரிகிறது.

## விளையாட்டு மலர்



ஆர்.யூ.பாலமுருகன்

# அபூர்வ சகோதரிகள்

டென்னிஸ் என்பதே வெள்ளை இனத் தவர்களின் விளையாட்டு என்று தான் நீண்ட காலமாக கருதப்பட்டது. இதை மற்றிக்காட் டியவர்கள் வீனஸ், செரினா வில்லியம்ஸ் சகோதரிகள். அமெரிக்காவைச் சேர்ந்த கறுப் பின பெண்களான இவ்விருவரும் பெண்கள் டென்னிஸ் போட்டிகளில் மீண்டும் கலக்கத் தொடங்கி விட்டனர். ஒற்றையர் பிரிவில் அக்கா வீனஸ் 7 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களையும் தங்கை செரீனா 8 கிராண்ட் இஸ்லாம் பட்டங் களையும் வென்றுள்ளனர். சமீபத்தில் நடந்த விம்பிள்டன் டென்னிசில் ஷரபோவா, இவா னோவிச்,ஜோன்கோவிச், டெமண்டிவா போன்ற முன்னணி வீராங்கனைகளையெல்லாம் ஓரம் கட்டிவிட்டு கம்பீரமாக இறுதிப் போட்டி யில் நேருக்கு நேராய் மோதினார்கள் இந்த சாதனை சகோதரிகள். நான்கு முறை விம் பிள்டன் சம்பியன் பட்டம் வென்ற அக்காவிடம் பரிதாபமாகத் தோற்றுப்போனார் செரீனா.

எப்படியோ கோப்பை தன்னுடைய வீட் டுக்கே வந்து மகிழ்ச்சியடைந்திருப்பார். வில் லியம் சகோதரிகளின் வெற்றிகளுக்கு முது கெலும்பாக இருப்பது அவர்களின் தந்தை ரிச்சட் வில்லியம்ஸ். தன்னுடைய மகள்க ளுக்கு மிகச் சரியான முறையில் வழி காட்டி அவர்கள் டென்னிஸ் கழத்தில் வெற்றிகளைக் குவிப்பதை கண்ணாரக்கண்டு ரசிக்கிறார்.




இரட்டையர் பிரிவையும் இவர்கள் விட்டுவைக்க வில்லை. இருவரும் இணைந்து தற்போதைய விம்பிள்டன் பட்டம் உட்பட 6கிரான்ஸ்லாம் பட் டங்களை வென்றுள்ளனர். விம்பிள்டன் இறுதி போட்டியில் மோதிய அனுபவம் பற்றி இரு வரும் ஒருவரையொருவர் மாறி மாறி புகழ் கிறார்கள்.

இறுதிப்போட்டி வரை வந்து சொந்த அக் காவிடம் சம்பியன் பட்டத்தை இழந்த செரினா கூறுகையில், இன்று வீனஸ் அற்புதமாக விளையாடினார். அதனால்த்தான் நான் திட் டம் இட்டது எதுவும் நடக்காமல் போய்விட்டது என்றார். பதிலுக்கு தங்கையின் திறமையை புகழ்ந்து பேசிய விம்பிள்டன் சம்பியன் வீனஸ் கூறியது செரீனாவுக்கு எதிராக இறுதிப்போட் டியில் விளையாடி சம்பியன் பட்டம் வெல்வது அவ்வளவு எளிதானதல்ல.

அவர் மிகவும் சிறப்பாக விளையாடினார். அந்தப் போட்டியை பார்த்துக்கொண்டிருந்த எங்கள் அம்மாவுக்குத் தான் சங்கடமாய் இருந்திருக்கும்.

ஒருவருக்காக சந்தோஷப்படவேண்டும் மற்றொரு வருக்காக வருத்தப்படவேண்டும். நானே ஜெயிக்க வேண்டும் என்றுஅவர் விரும்பியதாக நினைத் துக்கொள்கிறேன்.

நாங்கள் இருவரும் இறு திப்போட்டிக்கு தகுதி பெற்றதும் அதிலேயே திருப் தியாகிவிட்ட எங்கள் அப்பா வீட்டுக்குப் போய் விட்டார். பைனல் போட்டியை அவர் வீட்டில் இருந்து தான் பார்த்தார் இவ்வாறு வீனஸ் கூறினார்.

# அக்தரை சேர்ப்பதில் இழுபறி

(கராச்சி)

சம்பியன் தொடரில் கலந்து கொள்ளும் ...கிஸ்தானில் உத்தேச அணி அறிவிப்பதில் ...கிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி) தாமதம் செய்து ...ருகிறது.

அக்தரை சேர்ப்பதா? வேண்டாமா ? என்ற ...ழப்பத்தில் முடிவு எடுக்க முடியாமல் திண றுகிறது.

பாகிஸ்தானில் சச்சைகளின் நாயகன் அக்தர். பல ...டைகளுக்குப் பின்னர் இறுதி யாக 18 மாதத்தடையும் ...70 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டார் ...த்தனையும் எதிர்த்து அக்தர் மேல் முறையீடு செய்ய ...சா ரணை முடியும் வரை நீதிபதி தடையை மட்டும் ...றுத்தி வைத்தார்.

ஆனால் அபராதம் சம்மந்தமாக எதுவும் ...றவில்லை. இதனிடையே சம்பியன் தொட ரில் ...லந்துகொள்ளும் உத்தேசம் அணிக ளின் ...யர்ப்பட்டியலை யூலை 11இற்குள் வெளி யிடுமாறு ...சி.சி. நிர்ப்பந்தித்துள்ளது.

பி.சி.பி. அக்தருக்காக யூலை 15 அன்று 30 பேர் ...ங்கிய உத்தேச அணியின் பெயர் களை வெளியிட ...னுமதி கேட்டுள்ளது. யூலை 14ற்குள் அபராதம் 70 ...லட்சத்தை கட்டிவிட்டால் அக்தரும் சமீபத்தில் ...ாதைப் பொருள் பிரச்சினையால் நீக்கப்பட்ட ...கமது ஆஸிப்பும் சேர்க்கப்படலாம் எனத் தெரிகிறது.




இது பற்றி அக்தரின் சட்டத்தரணி கூறுகை யில், அக்தரை அபராதப்பணத்தை கட்டும் படி சபை நிர்ப்பந்திக்கவில்லை. ஏனென்றால் வழக்கு நிலுவையில் உள்ளது என்றார். வழக் கின் தீர்ப்பு தள்ளிப்போகும் நிலையில் அக்தர் அபராதத்தை முதலில் கட்டிவிட்டு பின்னர் சாத கமாக தீர்ப்பு வந்தால் பணத்தைத் திரும்ப பெற்றுக்கொள்ளட்டும் என கிரிக்கெட் சபை தெரி வித்ததாக செய்திகள் செய்திகள் வெளியாகி யுள்ளன. (5)

# ரஷ்யவீராங்கனை உலக சாதனை

ரஷ்யாவில் நடந்த ஒலிம்பிக் தகுதி சுற்றுப் போட்டிகளில் எலீனா இசின்பீவா கோல் ஊன்றி பாய்தல் பிரி வில் புதிய உலக சாத னை படைத்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டி கள் வரும் ஆகஸ்ட் முதல் சீனாவில் ஆரம் பமாகவுள்ளது. இதற் கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் ரஷ்யாவின் ரோம் ஒலிம்பிக் ஸ்ரேடி யத்தில் நடந்து வருகின் றன.



2004 ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற ரஷ்ய வீராங்கனை எலீனா இசின்பீவா நேற்று முன்தினம் நடந்த கோல் ஊன்றிப் பாய்தல் பிரிவில் 5.03 மீற்றர் உயரம் தாண்டி புதிய உலக சாதனை படைத் துள்ளார்.

இசின்பீவா ஏற்கனவே 5.01 மீற்றர் சாதனை படைத்திருந்தார். தற்போது 5.03 மீற்றர் தாண்டியதன் மூலம் தனது பழைய சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

இசின்பீவா நடிப்பதைத் தொழிலாகக் கொண்டவர். கடந்த ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இவர் பீஜிங் ஒலிம்பிக்கிலும் தங்கம் வெல்வார் என்பது சந்தேகமில்லை.

# தேர்தல் மோசடிகளை தடுத்து நிறுத்துவது தொடர்பில் ஐ.தே.கட்சி தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு

(கொழும்பு)

இடம்பெறுகின்ற மோசடிகளை தடுத்து நிறுத்துவது தொடர்பில் ஐ.தே.க.பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிற்கும் ஐ.தே.க.பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையிலான குழுவினருக்கும் இடையிலேயே இச் சந்திப்பு தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு ,தொடர்பில் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து தெரிவிக்கையில். வடமத்திய சப்ரகமுவ மாகாண சபைத்தேர்தலை சுதந்திரமும் நேர்மையானதுமான முறையில் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் குறிப்பாக அரசாங்கச் சொத்துக்கள் முறைகேடாக பயன்படுத்துதல் , வாக்கு மோசடிகள் இடம் பெறாமல் தவிர்த்தல் அது மட்டுமல்லாது தேர்தல் காலங்களில் அரச அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்களை கொடுக்காமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் வாக்குச்சாவடிக ளில் முறைகேடான வாக்களிப்புகள் இடம் பெற்றிருந்தால் அந்த வாக்களிப்பை செல்லுபடியற்றதாக்குவதற்கான நடவடிக்கை தொடர்பிலேயே கலந் துரையாடப்பட்டது. ஓ

# முறைப்பாடு செய்ய செல்பவரை கூண்டில் அடைப்பதும் குற்றவாளியை விடுவிப்பதுமே இன்றைய நாட்டு நிலைமை

(கொழும்பு)

பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப் போகிறவர்களை சிறைக்கூண்டில் அடைப்பதும் குற்றவாளியை விடுவிப்பதுமே இன்று நாட்டின் நிலைமையாகும்.

ஐ. தே. கட்சி தலைமையகமான சிறிகொத்தாவை அனுமதியின்றி புகைப்படமெடுத்த வரை விடுவித்து முறைப்பாடு செய்யச்சென்ற பாதுகாப்பு அதிகாரியை தடுத்து வைத்து, பொலிஸ்அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை மேற்க்கொள்ளவேண்டுமென ஐ. தே.கட்சிவலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் எதிர்க்கட்சிதலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஐ. தே. கட்சியின் பொதுச்செயயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது , கடந்த8 ஆம் திழகதி செவ்வாய்கிழமை மாலை சிறிகொத்தாவில் கட்சியின் பாதுகாப்புக் குழு கூட்டம்இடம் பெற்றது. இத்தருணத்தில்ஐ.ரி. என் நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் சிறி கொத்தா வை வீடியோபடம் எடுத்துள்ளதோடு அனுமதியின்றி தலைமையகத் திற்குள் புகுந்துள்ளார்.

தனியார் பாதுகாப்பு ஊழியர்கள் இவரை பிடித்து என்னிடம் கொண்டு வந்தனர். எங்களது அனுமதியின்றி வீடியோபடமெடுப்பது தவறு அத்தோடு எதிர்கட்சித் தலைவர்உட்பட முக்கியஸ்தர்கள்வந்து போகுமிடம்.

இந்த வீடியோ சட் புலிகளிடமோ அல்லது நாசகார சக்திகளிடமோ போய்ச் சேர்ந்தால் என்ன நடக்கும் என்றும் எடுத்துக் கூறினேன்.

நிறுவனத்தின் மேலதிகாரியின் உத்தரவுக்கமையவே இவ்வாறு செய்ததாக தெரி வித்தார்:

பின்னர் பொலிஸ் அவசர பிரிவுக்கும் மிரிஹானை பொலிசுக்கு இச் சம்பவத்தை அறிவித்தேன்.

பொலீஸார் வந்து வீடியோ படப் பிடிப்பாளரை அழைத்துச்சென்றதோடு முறைப் பாடு பதியப்படவேண்டுமெனவும் என்றும் எனவே , எனது பாதுகாப்பு உத்தியோகத்தரை அனுப்பி வைக்குமாறும் கோரினார்.

ஆனால் மிரிஹானை பொலிஸார் எனது அதிகாரியைத் தடுத்து வைத்துள்தோடு தற்போது 14 நாள் விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

வீடியோ படமெடுத்த நபர் தன்மீது தாக்குதல் நடத்தியதாக முறைப்பாடு செய்ததாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது உண்மைக்குப் புறம்பானது. தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை. வீடியோ கசட்டையும் நாங்கள் எடுக்கவில்லை.

எனவே இது அரசியல் தேவைக்காக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையாகும். அரசாங்கம் ஊடகவியலாளர் மீது மேற்கொண்டு வரும் அடக்குமுறையை மறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயலாகும் என்றும் திஸ்ஸ அத்த நாயக்க எம்.பி. தெரிவித்தார்.

லக்ஷ்மன் செனவிரட்ண எம்.பி. மலையகத்தில் வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. அதற்காக அம்மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

ஏனைய இடங்களிலும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் ஊழியர்களின் போராட்டத்திற்குஆதரவளித்தனர்.கொழும்பு தேசிய வைத்தியசாலையில் குண்டர்கள் அங்குள்ள ஊழியர்களை வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவிடாது தடுத்துள்ளனர்.

தலைமுடி வளர்த்தவர்கள் காதில் கம்மல் போட்டவர்கள் தாம் சுயமாக சேவை செய்வதற்காகவே வைத்திய சாலைக்கு வந்ததாக தெரிவித்துள்ளனர். இவ்வாறான சண்டியர்கள் சுய சேவைக்கா வருவார்கள்?

மேலும் பொலிசார் தொழிற்சங்க தலைவர்களைமறைமுகமாக மிரட்டியுள்ளனர். இவ்வாறானதொரு நிலையிலேயே வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்ற பின்னர் எம்.பி.க்களான திஸ்ஸ அத்த நாயக்க, ஜயலத் ஜெயவர்த்தன ,பாலித ரங்க பண்டரா ஆகியோர் கொள்ளுப் பிட்டியிலுள்ள தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு சென்றனர்.

அதன்பணிப்பாளரிடம் சிறிகொத்த சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்த தோடு மகஜர் ஒன்றையும் கையளித்தனர். ஓ

# மரம் போல் காட்சி அளித்தது கடல் நீர் பம்பலப்பிட்டி கடற்பரப்பில் பரபரப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கடற்பரப்பில் ஏற்பட்ட ஒரு விதமான திடீர் மாற்றத்தினால் கடல் நீர் மேலெழுந்தது. சில நிமிடங்கள் வரை மரம் போல காட்சி அளித்தது.

இதனைக் கண்ட அப்பகுதி மக்கள் ஆச்சரியத்திற்குள்ளானதுடன் பிரதேசத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. மக்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கிய இந்த அரிதான அதிசயமான சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நீர் மேலெழுந்த அருங்காட்சியை பம்பலப்பிட்டி கடற்கரையோரத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள உயரமான கட்டடங்களில் இருந்தவர்கள் நேற்று பிற்பகல் வேளையில் கண்டு களித்துள்ளனர். சுமார் 5 நிமிடங்கள் வரை நீர் மேலெழுந்தவாறே நின்ற கட்சியை காண முடிந்ததாக அக் காட்சியை கண்டு களித்த மக்கள் தெரிவித்தனர்.

கடற்பரப்பில் ஏற்பட்ட சுழற்காற்று காரணமாகவே கடல் நீர் மேலெழுந்துள்ளது. இதனால் சூழலுக்கு எவ்விதமான பாதிப்புகளும் இல்லை என்று தெரிவித்துள்ள வானிலை அவதான நிலையம் றொரண்டோ வகையான காலநிலை மாற்றத்தினாலேயே இவ்வாறான அதிசய மாற்றங்கள் நிலவும் என்றும் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழையை ஏற்படுத்தும் மேகத்தினாலேயே கடல் சுழற்காற்று கடல் நீரை வித்தியாசமான முறையில் மாற்றத்திற்குள்ளாக்குவதுடன் மரத்தைப் போல் மேலேழுந்து நிற்கச்செய்யும். இது தொடர்பில் பொதுமக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி டி.எம்.தயாரத்ன தெரிவித்துள்ளார். ஓ

# இலங்கை இந்திய எண்ணெய் அகழ்வு ஒப்பந்தம் தொடர்பில் சீனா அதிருப்தி

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எண்ணெய் அகழ்வு ஒப்பந்தம் தொடர்பில் சீனா அதிருப்தி அடைந்திருப்பதாக சில வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால் இலங்கைக்கு வழங்கிவரும் இராணுவ உதவிகளை சீனா குறைக்கும் வாய்ப்புள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வு மேற்கொள்வதற்கான தொகுதியொன்றை அரசாங்கம் கடந்த 7ஆம் திகதி இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனா இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்காக் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கியுள்ள அதேவேளை இராணுவ நடவடிக்கைகளுக்காக 37.6 மில்லியன் டொலர்களை வழங்கிவருகிறது. நுரைச்சோலை அனல்மின் நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு கலை மண்டபம் போன்ற திட்டங்களுக்கும் சீன அரசாங்கமே உதவி அளித்து வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் வளைகுடா பகுதியில் எண்ணெய் அகழ்வுக்கான முக்கிய தொகுதியை இந்தியாவிற்கு வழங்கியமை தொடர்பில் சீனா கடும் அதிருப்தியடைந்துள்ளது.

இதனால் இலங்கைக்கு வழங்கிவரும் இராணுவ பொருளாதார உதவிகளை குறைப்பது தொடர்பில் சீன அரசாங்கம் பரிசிலிக்கும் வாய்ப்புள்ளதாக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். ஓ



.பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் சிறுவர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலைச் சிறுவர்களுக்கு பசுப்பால் வழங்கும் திட்டத்தை அதிபர் கே. புஸ் பராசா ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சுவாமி சித்ரூபானந்தா, பாடசாலை ஆசிரியர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (பரு. நிருபர்)

# சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆண்கள் ஆட்சேர்ப்பு செயன்முறை நேர்முகப் பரீட்சை

(நேற்றைய தொடர்ச்சி)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட சுத்திகரிப்புத் தொழிலாளர் (ஆண்கள் ) ஆட்சேர்ப்பு செய்வதற்கான செயன் முறை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு,

**19ஆம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள்.**

வீ.ரஜீவ் -புத்தூர் கிழக்கு, இ.ஜெயகாந்தன் -புத்தூர் கிழக்கு, சி.கிருபாகரன் -அச்சுவேலி மேற்கு, செ.பிரியதர்சன் -அச்சு வேலி மேற்கு, கோ. ராமதாஸ் -அச்சுவேலி, து.காந்தலெனின் -கோண்டாவில் கிழக்கு, பொ. நிறோஜன்-புத்தூர் ,ப. நிமலதாஸ் -நீர்வேலி தெற்கு, நா. தமிழ்நேசன் -கொக்குவில் கிழக்கு, தெ.கவிதாசன் -புத்தூர் கிழக்கு, உ. பகீகர் -புத்தூர் கிழக்கு , சி. ஜெயதீபன் -புத்தூர் கிழக்கு,ந. விஜயந்தன் -புத்தூர் கிழக்கு , இ. மெபாகர் -புத்தூர், பா. கௌதமன் -புத்தூர் கிழக்கு , தே. குணேஸ்வரன்- நீர்வேலி, கு.கோகிலன்- புத்தூர்கிழக்கு, சு. நகுலன்-புத்தூர், பா .கௌசிகன் -புத்தூர், க. பஞ்சநாதன் - அச்செழு, ந. மகிந்தன் -உரும் பிராய் மேற்கு, பா. தர்சிகா -புத்தூர் கிழக்கு , கோ. ஞானதாஸ் -அச்சுவேலி ,க. குமரன் -உரும்பிராய் தெற்கு, கா. சத்தியகாந்தன் -அரியாலை மேற்கு, கா. மோகன்தாஸ் - கோண்டாவில் வடக்கு.

ந. றொபின்சன்- திருநெல்வேலி, து. தயாகரன்- கோப்பாய் மத்தி, செ. விக்னேஸ்வரன் - கோண்டாவில் வடக்கு, பு. விஜியதீபன் - கோண்டாவில் கிழக்கு , செ.செல்வரஞ்ஜிதன்-புத்தூர் கிழக்கு, ந. சதீஸ்வரன் -நீர்வேலி, அ. செல்வக்குமார் - அச்சுவேலி தெற்கு ,ந. கிருஷ்ணரூபன் - புத்தூர் கிழக்கு, வீ.பிரதீபன்- புத்தூர் கிழக்கு,தி. நீதிராசா, புத்தூர்கிழக்கு, த. கிரிசாந்தன்- அச்சுவேலி தெற்கு, ந.தவநேசன்- அச்சுவேலி வடக்கு , சி. உதயகுமார்-நீர்வேலி,த. சுரேஷ் - அச்செழு, செ. தவேஷ்வரன்- கோப்பாய் வடக்கு, ஆர்.யோகராஜா- உரும்பிராய் வீதி , க. குகதாசன்- புத்தூர் கிழக்கு, சி. தயான்சன்-நீர்வேலி, ந.சுரேஸ் -உரும்பிராய் மேற்கு, க. ஸ்ரீலங்கநந்தம் -புத்தூர் கிழக்கு, ந. தனேந்திரன் -புத்தூர் கிழக்கு, ச. வசந்தபாலன் -நயினாதீவு , ந. கனகரட்ணம் -கோண்டாவில் கிழக்கு, பா. நெல்சன்-கோண்டாவில் கிழக்கு, ச. கஜதீபன் -கோண்டாவில் கிழக்கு, க. கஜதீபன் -கோண்டாவில் கிழக்கு, க.குகதீபன் -கோண்டாவில் கிழக்கு, மா. மயூரன் -உரும்பிராய் தெற்கு.


ப. கில்சன்-உரும்பிராய் மேற்கு, ப. திலீபன்-கோப்பாய் தெற்கு, ப. விமல் -கல்வியங்காடு, கி. ப்கீரதன் -கோப்பாய் தெற்கு, த. விஜிபன்- கோப்பாய் தெற்கு, சு. சபேஸ் -நீர்வேலிவடக்கு, நா. சுரேஸ்குமார் - கொக்குவில் மேற்கு, வ. கனிஸ்ரன்-கோண்டாவில் கிழக்கு, எஸ்.செல்வரூபன் -கொக்குவில் மேற்கு, செ.விக்னேஸ்வரன்- கோண்டாவில், கி.றின்சான் கோண்டாவில் கிழக்கு.

த. எழில்கரன் -கொக்குவில் மேற்கு, தெ. சிவ கரன்-புத்தூர் கிழக்கு, செ. கம்சன் -அச்சுவேலி தெற்கு, தி. ரமணன் -கோண்டாவில் கிழக்கு, செ. ரகுநாத் -அச்சுவேலி, மா. ரவிசங்கர்- கொக்குவில் மேற்கு, க. மோகனராசா- திருநெல்வேலி, இ. சதாகரன் -திருநெல்வேலி, கி. நிஷாந்தன் . கொக்குவில் மேற்கு, தெ. ஜெசிந்தன்- புத்தூர் கிழக்கு, செ. றொபின்குமார் - அச்செழு, நா. செல்வகுமார்-கோண்டாவில் கிழக்கு, நா. ஜீவகுமார் -புத்தூர் கிழக்கு, சி. கிருபாநந்தன் -நீர்வேலி , நா. ஜதீஸ்வரன் -புத்தூர் கிழக்கு.

நேற்றைய பத்திரிகையில் வெளியான பெயர்களுக்குரியோர் 18 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களாகும். (முற்றும்)

# கலைஞர் கதை வசனத்தில் பிரசாந்த்

## பிரமாண்டமாக உருவாகும் பொன்னர் சங்கர்



கலைஞர் எழுதிய பொன்னர் சங்கர் என்ற சரித்திர நாவல் திரைப்படமாகிறது. இதில் பொன்னராகவும் சங்கராகவும் பிராசாந்த் நடிக்கிறார். படத்தை இயக்கப் போவது பிரசாந்தின் அப்பா தியாகராஜன். இரண்டு வேடத்திலும் பிரசாந்த் நடிக்கட்டுமே என்று விரும்பியதும் கலைஞர் தானாம்.

தமிழ்திரைப்பட வரலாற்றில் இத்தனை பொருட் செலவில் எடுக்கப்பட்ட முதல் சரித்திரப் படம் இதுவாகத் தான் இருக்க வேண்டும். ஆஸ்கார் விருதுக்கு ஆசைப்படுகின்ற தமிழன் அந்த ஆசையை நிறைவேற்றிக்கொள்ளலாம். இந்தப் படத்தை ஆஸ்கார் விருதுக்கு அனுப்புவேன் என்கிறார் தியாகராஜன். உலகம் முழுவதும் அலசி சிறந்த கிராபிக்ஸ் நிறுவனத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார்களாம்.

அதேமாதிரி முக்கிய காட்சிகளும் வெளிநாட்டில் படமாகவிருக்கிறது. கதையில் கலைஞர் எழுதியிருக்கும் ஒவ்வொரு வரியையும் அப்படியே திரையில் பதிவு செய்ய விரும்புகிறேன். போர்க் காட்சிகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களைப் பங்கு பெறச்செய்வேன். அதேபோல் கணக்கில் அடங்காத குதிரைகள், யானைகள் என்று பிரமாண்டத்திற்கு பஞ்சம் இருக்காது என்கிறார் தியாகராஜன். சரி இவ்வளவு செலவை தாங்குகிற தயாரிப்பாளர் வேண்டுமே? அதனால் தான் என் அப்பாவையே பொன்னர் சங்கரை தயாரிக்க சொன்னேன் என்கிறார் பிரசாந்த். ஒன்றரை வருடத்திற்கு முன்பே முழு ஸ்கிரிப்டையும் கொடுத்துவிட்டாராம் கலைஞர். அதை திரைக்கேற்ப வடிவமைக்கவே இத்தனை மாதங்கள் ஆகிவிட்டதாம். என் கல்லூரி நாட்களில் இந்த கதையை படித்துவிட்டு இதை படமாக்கி அதில் நடிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போதுதான் அது கனிந்திருக்கிறது. நான் ஆசைப்பட்டதை என்பிள்ளை செய்கிறார் என்றார் தியாகராஜன்.




# உயரப் பறக்கும் ஜெனிலியா



இந்தியில் அமீர்கான் தயாரிப்பில் அவரது சகோதரியின் மகனான இம்ரான்கான் நடித்து வெளியாகியுள்ள ஜானே..து நஜானே யா திரைப்படம் அதிரடியாக ஹிட் ஆகியிருப்பதில் அமீர்கானை விட அதிக சந்தோஷத்திலிருக்கிறார் ஜெனிலியா.

இருக்காதா பின்னே.... அவர்தானே படத்தின் நாயகி.

தென்னிந்திய படவுலகிலிருந்து இரண்டாண்டுக்கு முன்பே இந்திக்குப்போன அசினின் முதல்படமான கஜினி இன்னமும் வெளிவரவேயில்லை. ஆனால் இப்போது தான் பொலிவுட போன ஜெனிலியாவின் படம் தொடங்கப் பட்ட வேகத்திலேயேமுடிவடைந்து வெளியாகி சூப்பர் ஹிட்டாகியிருக்கிறது.

இந்தப்படம் வருவதற்காகத் தான் அமீர்கான் தனது கஜினியை தாமதமாக ரிலீஸ்செய்திருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஜெனிலியாவைத் தேடி மிகப் பெரிய வாய்ப்புகள் வந்த வண்ணமுள்ளனவாம் இந்தியில்.

இனி தென்னிந்திய மொழிப்படங்களுக்கு குட்பை தானா?

இந்த வழக்கமான கேள்விக்கு ஜெனிலியா தரும் வழக்கமான பதில்..........

அப்படியெல்லாம் இல்லை இந்திப் படவுலகம் எனக்குப் புதிதில்லை. நானும் இந்த ஊர்ப்பெண்தானே. இந்த மாதிரிஒரு வாய்ப்புக்காகத்தான் காத்திருந்தேன். ஜெயித்துவிட்டேன். சந்தோஷமாகஇருக்கிறது.

ஆனால் எனக்கு மொழிவேறுபாடுகள் கிடையாது. எந்தமொழிப்படமாக இருந்தாலும் நல்ல ரோல் நல்ல சம்பளமென்றால் நான் நடிக்கத் தயார் ..என்கிறார்.

நல்ல பொலிஸி

# சினி விமர்சனம்





# உளியின் ஓசை

நட்சத்திரங்கள் :- வினித், அட்சயா, கீர்த்தி சாவ்லா, மனோரமா, கோவைசரளா, கஞ்சா கருப்பு மற்றும்பலர்
கதை வசனம்: கலைஞர் கருணாநிதி
இசை: இளையராஜா
இயக்கம்: இளவேனில்

சரித்திரப் படங்களின் ஆயுள், கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வரும் நிலையில், மற்றுமொரு சரித்திரப்படம் தான் உளியின் ஓசை. ஆனால், ஆயுளுக்கும் ரசிக்கிற மாதிரி கருத்தையும், எழுத்தையும்கலந்து கொடுத்திருக்கிறார்கலைஞர்.

அதிலும், க்ளைமாக்சுக்கு முன்னர் வரும் திருப்பம், மனசை உலுக்கும் ஆயிரம் வாட்ஸ்ஷொக்! சோழ மன்னன் ராஜராஜன், காலமெல்லாம் நிலைத்திருக்கும் விதமாக ஒரு கோவில் கட்ட நினைக்கிறான். புகழ்பெற்ற சிற்பியான வினித்திடம் சிலை வடிக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறார்கள். ஆடற்கலையை வெளிப் படுத்தும் 100 சிலைகளை வடிக்க முடிவெடுக்கும் வினித் மொடலுக்கு ஒரு நடன மங்கையை தேடுகிறார். சோழ மண்டலத்தின் அரசவை நர்த்தகிகூட, வினித்தின் தேர்வில் எடுபடாமல் போக, ஆட்டுக்காரியின் பேத்தி அசத்துகிறார் நாட்டியத்தில்! பிறகென்ன, அவரையே மொடலாக வைத்து சிலைகள் உருவாகிறது.



இதற்கிடையில் அரசவை நர்த்தகி அட்சயாவுக்கு வினித் மேல் காதல். வினித்திற்கோ ஆட்டுக்காரியின் பேத்தியான கீர்த்திசாவ்லா மீது காதல். இந்த முக்கோண காதலின் முடிவு பெருந்தச்சன் வினித்திற்கு மட்டுமா அதிர்ச்சியை கொடுக்கிறது? படம் பார்க்கும் நமக்கும் தான்! சிற்பி கேரக்டருக்கு வினித்தை விட பொருத்தமாக வேறு நடிகர் கிடைக்க மாட்டார். அந்தளவுக்கு கச்சிதம். அரசவை நர்த்தகி அட்சயா முன், தானே நாட்டியம் ஆடி அரசவையை அசரவைப்பது அழகு. தன்னை கொல்ல வருபவனுக்கு கூட, பாசத்தோடு பச்சிலை போட்டு அனுப்புவதும், அட்சயாவின் உயிரை காப்பாற்றி விட்டு, அதை அவரிடம் சொல்ல வேண் டாம் என்று கேட்டுக் கொள்வதும், மனிதாபிமானத்தின் அடையாளம்.

எக்குத்தப்பான அழகு அட்சயாவுக்கு தொடக்கத்தில் நீலாம்பரியாக தோன்றினாலும், முடிவில் கைதட்ட வைக்கிறார். இவர் ஆடும் அந்தப் பாம்பு டான்ஸ் பிரமிப்பு!

ஆட்டுக்காரியின் பேத்தியாக வரும் கீர்த்திசாவ்லாவுக்கு நடிக்க அதிக சந்தர்ப்பம் இல்லை. அடிக்கடி உதடு சுழிப்பதும் மைனஸ்.

கஞ்சா கருப்பும், கோவை சரளாவும் அவ்வப்போது சிரிக்க வைத்தாலும் பெரும்பாலான காட்சிகளில் எரிச்சலூட்டுகிறார்கள். போதாததற்கு மனோரமா வேறு. இவர் ஆடுகிற ஆட்டத்தை கூசாமல் நறுக்கினால் நேரம் மிச்சம்.

இளையராஜாவின் இசையில் எல்லா பாடல்களும் தேன்! பாடல் வரிகளும் சிலை வடிப்பதை போல் அழகாக வடிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக மு.மேத்தா எழுதியிருக்கும் "புலர்கின்ற பொழுது காட்டும்" பாடல் அற்புதம். பல இடங்களில் உணர்ச்சி ததும்பும் வசனங்களை ராஜாவின் பின்னணி இசையே பேசிவிடுகிறது.

"சிறகிருக்கிறது என்பதற்காக சூரியனுக்குள் குதிப்பாயா?" என்று அனல் கக்கும் கலைஞரின் பேனா, ஆங்காங்கே நகைச்சுவையையும் தொட்டிருக்கிறது. கிழவியை பின் தொடரும் வினித், அவரை காதலி என்று நினைத்து அழைக்க, கிழவியோ 'நான் கல்யாணம் ஆனவங்க' என்று பதறி ஓடுவதைச் சொல்வதா? தனது பெயரைச் சொல்லும் முன் அதாவது என்று ஆரம்பிக்கும் வினித்திடம், 'அதாவது என்ற ஒரு பெயரா' என்று அட்சயா நக்கலடிப் பதை சொல்வதா? ருசிக்க ருசிக்க பரிமாறியிருக்கிறார் கலைஞர்.

படத்தை எந்த இடத்திலும் தொய்வு விழாதபடி நகர்த்தியிருக்கிறார் இயக்குனர் இளவேனில்.

கலைஞரின் கலையுலக வரலாற்றில் இந்த 'இளவேனில்' காலம் மறக்கவே முடியாததுதான்!

# வசூல் சக்கரவர்த்தி ரஜினி



ரஜினியின் வாழ்க்கை வரலாறு குறித்து ஏற்கனவே புத்தகம் வெளிவந்து விற்பனையில் புதிய சாதனை படைத்து வருகிறது.

இந்நிலையில் அவரது சாதனைகளைப் பற்றி இன்னுமொரு புத்தகம் எழுதப்பட்டு வருகிறது.

இப் புத்தகத்தை எழுதுபவர் வேறுயாருமல்ல. கவிதாலயா புஷ்பாவின் கணவர் கந்தசாமி. அதாவது இயக்குநர் கே .பாலச்சந்தரின் மருமகன். ரஜனியின் படங்களுக்கு உலக நாடுகளில் கிடைக்கும் வரவேற்பு அயல்நாட்டு மக்களும் அவர் படத்தை ரசித்துப் பார்க்கும்விதம்வெளிநாடு களில் ரஜினி படங்களுக்கு இதுவரைகிடைத்துள்ள வசூல் விபரம் போன்றவற்றை புள்ளி விபரங்களுடன் எழுதி வருகிறார் கந்தசாமி.

குசேலன் ரிலீசுக்குப் பிறகு இந்தப்புத்தகத்தை ரிலீஸ் செய்யும் திட்டமுள்ளதாம் தமிழில்இந்தப் புத்தகத்துக்கு வசூல் சக்கரவர்த்தி ரஜினி எனத் தலைப்பு வைக்கும் திட்டமுள்ளதாம்.

# இந்திரலோக இளவரசனில் 'கிராபிக்' கமலஹாசன்



ஆந்திராவில் சமீபத்தில்திரைக்குவந்து வசூலில்சக்கைபோடு போட்ட தெலுங்குப் படம் எமகோல. ஸ்ரீகாந்த் ( நடிகை சிவரஞ்சனியின்கணவர்), ரீமாசென், மீரா ஜஸ் மின், ஆகியோர் கதாநாயகன்-கதாநாயகிகளாக நடித்து இருந்தார்கள்.

இந்தப்படம், இந்திரலோக இளவரசன் என்ற பெயரில் தமிழில்மொழிமாற்றம்செய்யப்படுகிறது. அதில் கமலஹாசன் ஒரு கௌரவ வேடத்தில்வருவது போல் கிராபிக்ஸ்சில் ஒருகாட்சி இணைக்கப்பட்டுள்ளது.

சம்பவங்கள் முழு வதும் இந்திரலோகத்தில் நடைபெறுவது போல் திரைக்கதை அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்திரலோகத்தில் நடை பெறும்ஒரு போட்டிக் காட்சியில் கமலஹாசன் இடம்பெறு கிறார்.

# பிரகாஷ்ராஜுக்கு பிடிவாரண்ட்!



நடிகர் பிரகாஷ் ராஜுக்கு ஆந்திரா கோர்ட் பிடிவாரண்ட பிறப்பித்துள்ளது. இதையடுத்து பிரகாஷ்ராஜைக் கைது செய்ய ஆந்திரபொலிஸார் சென்னை விரைகின்றனர். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சித்து என்கிற தெலுங்குப் படத்தில் நடிக்க ஒப்பந்தமானார் பிரகாஷ் ராஜ்.

அப் படத்தில் ஹீரோயினாக கிரணும், நாயகனாக சசிகாந்தும் புக்ஆனார்கள். ரகுவரன் இதில் மேயராக நடித்துள்ளார். காவல்துறை அதிகாரி வேடம் பிரகாஷ்ராஜுக்கு.

நாகேஸ்வரராவ் இயக்கும் இப் படத்தின் தயாரிப்பாளர் பிரசாத். ஆரம்பத்தில் எல்லாம் நல்லபடியாகத் தான் போய்க் கொண்டிருந்தது. இன்னும் 3 நா ட்கள் நடித்தால் பிரகாஷ் ராஜின் போர்ஷன் முடிவடைந்து விடும் தறுவாயில் தயாரிப்பாளருக்கும், பிரகாஷ் ராஜுக்கும் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது.

இதையடுத்து நடிக்க மறுத்துவிட்டார் பிரகாஷ்ராஜ். இதனால் படம் வளராமல் அப்படியே நின்றுபோய் விட்டது. இதுகுறித்து தெலுங்குத்தயாரிப்பாளர் சங்கத்தில் பிரசாத் புகார்கொடுத்தார். விசாரணை நடத்தப்பட்டு, பிரகாஷ்ராஜ் நடித்துக்கொடுக்க உத்தரவிடப்பட்டது. அதை ஏற்று பிரகாஷ் ராஜ் நடிக்க வந்தார்.

ஆனால் படம் முழுக்க மீசை இல்லாமல் வந்திருந்தார் பிரகாஷ்ராஜ். மீண்டும்நடிக்க வந்தபோது அடர்த்தியான மீசையுடன் வந்தார் பிரகாஷ்ராஜ். அவரை மீசையை எடுத்து விடுமாறு கூறியுள்ளார் இயக்குநர். ஆனால் மீசையை எடுக்க முடியாது என்று பிரகாஷ்ராஜ் மறுத்துவிட்டார். இதனால் மறுபடியும் முட்டிக் கொண்டது.

இதையடுத்து பிரசாத், ஹைதரபாத் கோர்ட்டில் பிரகாஷ் ராஜ் மீது கேஸ் போட்டார். அதை விசாரித்த நீதிபதி, பிரகாஷ் ராஜைக் கைது செய்து ஆஜர்படுத்துமாறு கூறி பிடிவாரண்ட் பிறப்பித்து பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதையடுத்து பொலிஸார் சென்னைக்கு வந்து பிரகாஷ் ராஜைக் கைது செய்யவுள்ளதாக கூறப்படுகிறது. இந்தப் பிரச்சினைகுறித்துதயாரிப்பாளர் பிரசாத்கூறுகையில், ஏற்கனவே ரகுவரன் நடித்த காட்சிகளை வெட்டி விட்டு புதிய நடிகரை வைத்து படமாக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையில் பிரகாஷ்ராஜும் இப்படிச்எ செய்தால் எனது நிலை என்னாவது என்று புலம்பினார்.

# தந்தைக்கு சிலை வடித்து நினைவாலயம் அமைத்த நன்மக்கள்

தந்தைக்கு சிலை வடித்து நினை வாலயம் எழுப்பி மரியாதை செய்துள்ளனர் நன் மக்கள். திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள கோவிந்தாபுரம் ஏரிஸ்70வயது பூர்த்தியாகி மறைந்த வெங்கடாசலம் பிள்ளைக்கு தியான மண்டம் கொண்ட நினைவாலயம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. பிள்ளையவர் களின் தொழில் பத்திரம் எழுதுவது அவ ருக்கு மூன்று பிள்ளைகள் ஒருவர் வக்கீல் ஒருவர் துணிக்கடை , அடுத்த வர்த்தநை யின் தொழிலான பத்திரம்எழுதும் தொழிலை மேற்கொண்டிருக்கிறார். கடவுள் பக்தி ஏழை எளியவர்களுக்கு உதவுவது இவை வாழ்க் கைக்கு மிகவும் அவசியம் என்று பிள்ளை யவர்கள் வற்புறுத்துவதுண்டு. தந்தையின் பாசத்தையும்பற்றையும் மறக்க இயலாத அந்த மைந்தர்கள் அவர் விட்டுச் சென்ற மூன்றரை ஏக்கர் நிலத்தில் 9 ஆயிரம் சதுர அடி கொண்ட நினைவாலயம் ஒன்றை எழுப்பியுள்ளனர். அறு கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள அந்த மண்டபத்தில் தந்தையின் 8 அடியுயர வெண் கலச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

அந்த மண்டபத்தை சுற்றியுள்ள பகுதி யில் செடிகொடிகள் , பழ மரங்கள் முதலி யன நிழலையும் தியானத்திற்கான அமைதி - யானசூழ் நிலையையும்அமைத்துத் தந்துள் ளது. மணடபத்திற்கு செல்ல அனுமதி இல வசம் யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும், அங்கு சென்று தியா னித்து அமைதிபெறலாம். (இ)

### கீழ்ப்படியாத குழந்தைகளுக்கு மன நிலை பாதிப்பு ஆய்வில் கண்டுபிடிப்பு

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் சமீபத்தில் 52 குழந்தைகளிடம் மன நல நிபுணர்கள் ஆய்வுநடத்தினார்கள் அதில் பெற் றோருக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் குழந்தை களிடம்லேசான மனபாதிப்பு இருப்பது தெரிய வந்தது.

மேலும் வீட்டில் துறு துறுவென திரியும் குழந்தைகளிடம் கவனிக்கும் தன்மை குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது பற்றி மன நல நிபுணர் பெஞ்சமின் கூறும் போது நாங்கள் மேற்கொண்ட ஆய் வில் குழந்தைகள் சரிவர பேசாமல் இருந் தாலோ வீட்டிற்குள் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தாலோ அவர்களுக்கு மன நிலை பாதிப்பிருக்கும். அவர்களுக்கு உரிய மனநிலை சிகிச்சை அளித்தால் குணமாக்கி விடலாம். கடந்த சில ஆண்டுகளாக குழந்தை களிடம் மன நிலை பாதிப்பு அதிகரித்துள்ளது. கீழ்ப்படியாத குழந்தைகளுக்கு பெற்றோர் உரிய மன நல சிகிச்சை அளிக்காவிட்டால் எதிர்காலம் பாதிக்கப்படும் என்றார். (இ)

# இந்தியாவில் பெருகிவரும் மக்கட்தொகை 2050 ஆம் ஆண்டில் சீனாவை மிஞ்சிவிடும்

உலக மக்கள் தொகை தினமான நேற்று சனிக்கிழமை அதிகரித்து வரும் மக்கள் தொகை குறித்து பல நாடுகளில் கவலைகள் அதிகரித்துள்ளன. இந்தியாவில் 2010 ஆம் ஆண்டு இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப் பட்ட மக்கள் தொகை தற்போதே உள்ளன என்று தகவல்கள் கூறுகின்றன. 2050 ஆம் ஆண்டு அளவில் இந்தயாவின் மக்கட் தொகை சீனாவை விட கூடுதலாக இருக்கும் என்று கருத் துக்கள் வெளியாகியுள்ளன.

இதன் பின்புலத்தின் இந்தியா பல வகை யான சவால்களை சந்திக்க நேரிடும் என வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

இந்தியாவில் பிறப்பு இறப்பு ஆகிய இரண் டுமே குறைந்து கொண்டிருக்கிறது என்றும் இதன் காரணமாக முதியோர்களின் எண் ணிக்கை அதிகரித்தல் இருப் பிடங் களுக்காக விளை நிலங்கள் கையகப்படுத்தப்படுதல் ஆகியவை பெரும்பிரச்சினைகளை ஏற்படுத் தக் கூடும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின் றனர். (இ)

### கொசோவோவின் அபிவிருத்தி திட்டங்களுக்கு 1.2 மில்லியன் யூரோக்கள் நன்கொடை

அண்மையில் சுதந்திர பிரகடனம் பெற்ற நாடான கொசோவோவிற்கு சர்வதேச நன் கொடையாளர்களால் 1.2 மில்லியன் யூரோக் கள் நன்கொடையாக வழங்கவுள்ளதாக புரு செலில் இடம்பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நன் கொடை கொசோவோ நாட்டின் அபிவிருத்தி திட்டங் களுக்கு பயன்படுத்தப்படவுள்ளது . கடந்த பெப்ரவரி மாதம் கொசோவோ சேபியாவி லிருந்து சுதந்திரம் பெற்று கொண்டமை குறிப் பிடத்தக்கது. (இ)

# பனிப்பாறைகள் உருகி வரும் நிலையில் விசாலமடைந்து வரும் 'ஷஸ்தா' பனிமலை

(கலிபோர்னியா)

பூகோள வெப்பமாதல் காரணமாக உல கெங்குமுள்ள பனிப்பாறைகள்உருகி வரு கின்ற நிலையில் , அமெரிக்க கலிபோர்னிய மாநிலத்திலுள்ள ஷஸ்தா பனிமலையானது நாளுக்கு நாள் பெரிதாகி வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து 14. 162அடி உயரத் திலுள்ள இப்பனிமலையானது அம் மாநிலத் தின் மிக உயரமான மலைச்சிகரங்களில் ஒன் றாக விளங்குகின்றது.

இந்த பனிமலை குறித்து கல்போர்னிய பல்கலைக்கழகத்தின் புவியியல் விஞ்ஞான உதவிப் பேராசிரியர் சலாவெக் துலாக்ஷிக் விபரிக்கையில்,

உலகளாவிய ரீதியில் பெரும்பாலான பனிமலைகள் உருகி வருகின்ற நிலையில் ஷஸ்தா பனிமலையானது காலநிலை மாற் றம் காரணாக அனுகூலமடைந்துள்ளது.

சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து வடக்கே 270 மைல் தொலைவிலுள்ள இப் பனிமலையில் பசுபிக் சமுத்திர காலநிலை காரணமாக தொடர்ந்து பனி பெய்து வருவ தாகவும் அதன் காரணமாக மேற்படி பனி மலை விசாலமாகி வருவதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (இ)

# கிராம மக்களின் வறுமையைத் தணிப்பதில் கிராம மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பங்கு

இலங்கையில் அரசாங்க உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங் களின் வரலாறு 1930 ஆண்டிலிருந்து ஆரம் பமாகின்றது. இச்சங்கங்கள் அக்காலப் பகுதி யில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை, மலே ரியா தொற்றுநோய் ஆகியவற்றின் தாக்கங் களின் பின் கிராம மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றத்தினை மீண்டும் ஏற்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டன. அதி களவில் பாதிக்கப்பட்ட கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு கிராம அபிவிருத்தியின் ஆரம்ப திட்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொழுதே இன்றைய கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உதயமாகியது. இம்முறையின்வெற்றியின் பயனாக 1948 ல் கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பிக் கப்பட்டது.

இக்கிராம அபிவிருத்திச் சங்கங்களுடன் தொடர்பாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய பலம் வாய்ந்தவேறு நிறுவ னங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. அவை பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், விவசாய உற்பத்திப்பெருக்கக்குழுக்கள், கிராம சபை கள், பயிர்ச்செய்கைக் குழுக்கள் கூட்டுறவுக் கிராமங்கள், கூட்டுறவுப் பண்ணைகள் என்பனவாகும்.

**சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பங்கு**

எமது நாட்டின் பொருளாதார நிலை, எமது உற்பத்தித்திறன் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளை மக்களிடையே பரப்புவதில் மிக வும் சக்தி வாய்ந்த இயக்கமாக கிராம அபிவிரு த்திச்சங்கங்கள்இருந்துள்ளன. இவை தன் னிச்சையானவை, சட்டத்தினால் ஏற்படுத்தப் படாதவை. இதன்மூலம் கிராம வறுமையை குறைப்பதற்கான அனைத்து வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற் கான தத்துவம் வாய்ந்தவை. இவை தமது செயற்பாடுகளை ஓர் தொடர்ச்சியான சமூக அசைவியக்கப்பொறி முறை மூலம்முன் நகர்த்தும் செயற்பாட்டினை ஏனைய சமூக மட்ட அமைப்புக்களை விட சிறப்பாக செய்யக் கூடியவையாக உள்ளன. 1948ஆம் ஆண்டு கேம்பிறிட்சில் நடைபெற்ற ஆபிரிக்க நிர்வா கம் பற்றிய மகாநாட்டில் (Conference On African Administration) கூறப் பட்ட சமூக அபிவிருத்தியை ஓர் சமூக அசை வியக்கமாக முழு சமூகத்திற்கும் ஏற்ற வகை யில் செயற்படுத்த கிராம அபிவிருத்திச் சங் கங்கள் பொருத்தமான அமைப்பாக இருக் கின்றன. சமூக அபிவிருத் தியின் முதற்கட்ட நடவடிக்கையாக அங்குள்ள வறுமையை ஒழித்தல் என்பது அமைந்துள்ளது. இதன் போதான நடவடிக்கைகளில் கிராமத்திற்கு வேண்டிய அத்தியாவசிய சேவைகளை அர சாங்க உதவியுடன பூர்த்தி செய்வது மட்டு மல்ல கிராம மக்களின் வறுமையை தணிப் பதற்கு சுயமுயற்சி நடவடிக்கைகள் மூலம் ஊக்குவிப்பதே நிலைத்த பயன் பெறத்தக்க நடவடிக்கையாக அமையும். ஒரு மனித னுக்கு ஒரு மீனைக் கொடுத்தால் அவன் இன்று மட்டும் மீன் உண்பான். ஆனால் அவனிடம் ஒரு தூண்டிலைக் கொடுத்தாலோ அவன் இன்று மட்டுமல்ல என்றென்றும் மீன் உண்பான் என்ற சீனப் பழமொழிக்கமைய ஒருவன் தனது வறுமையை தனது சுய முயற்சி மூலம் குறைத்துக்கொள்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்ப தற்கு கிராம அபிவிருத்திச்சங்கங்கள் பொருத் தமான சமூக மட்ட அமைப்பாக இருக்கின்றன.

**கிராமிய மக்களின் வறுமை ஒழிப்பில் கிராம, மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பங்கு**

வறுமை எனப்படுவது மக்கள் தமது அடிப் படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத நிலையே ஆகும். இவ்வாறான வறுமை நிலைக்கு குறைவான வருமானம் உழைத்தல் மற்றும் போசாக்கு, சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி என்பன போன்ற அடிப்ப டைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியா திருத்தல் என்பன அடிப்படை காரணமாக இனங்காணப்படுகின்றன. இவ்வாறான வறு மையைக் குறைக்க கிராம மாதர்கிராம அபி விருத்திச்சங்கங்கள் ஊழியத்தை பயிற்று வித்தல், கடன் வசதி அளித்தல், தொழில் முயற்சியாண்மையை விருத்தி செய்வதற் கான ஏனைய வசதிகளை ஏற்படுத்தல் போன்ற வழிகளில் கிராம மக்களுக்கு தமது பணிகளை மேற்கொள்ளலாம். கிராமிய மக்க ளின் வறுமையை ஒழிக்க அல்லது தணிக்க அரசாங்கம் காலத்திற்கு காலம் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்படுத்தி இருந்தது. 1940 களில் உணவு மானியத்திட்டம், 1994இல் கோதுமை மாவிற்கு மானியம் வழங்குதல், 1979 இல் உணவு முத்திரைத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் பின்பாக, 1989இல்ஜனசக்தி அறிமுக ப்படுத்தப் பட்டது. 1995இல் சமூர்த்தி திட்டம் தற்போது "கமநகும" என்பன அரசாங் கத்தின் பக்கத்திலிருந்து நடைமுறைப்படுத் தப்பட்டிருப்பினும் அவை கடந்த காலங் களில் கிராமிய வறுமையை ஒழிக்க முழுமை யான பங்களிப்பினை வழங்க தவறிவிட்டன என்றே கருத வேண்டியுள்ளது.

கிராம மக்கள் பல்வேறு அடிப்படை பிரச்சி னைகளுக்கு நீண்ட காலமாக முகம் கொடுத்து வந்துள்ளமையும் அரசினால் அவர்களின் வறுமையை ஒழிக்க முடியாமல் போனமைக்கு காரணமாக இருக்கலாம். எனி னும் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப் பதில் கிராம மக்களிடையே ஏற்படுத்தப்படும் ஒற்றுமை, விட்டுக்கொடுத்து வாழுதல், விழிப் புணர்வுடன்செயற்படுதல், கிராம மக்கள் தம் மைத்தாம் அறிந்து கொள்ளுதல் போன்ற வற்றிற்கு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கூடியளவு தமது பங்களிப்பினை வழங்கக் கூடியதாகச் செயற்பட முடியும். கட ந்த காலங்களில் அவ்வாறு செயற்பட்ட போதும் இவை மேலும் கூடியளவில் முன்னெடுக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

**விவசாய மற்றும் குடிசைக்கைத்தொழிலுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கல்**

கிராம மக்களின்மிக முக்கிய வாழ்வியல் ஆதாரமாக விவசாயத்துறை அமைந்துள் ளது. இத்துறையில்அவர்கள் முகம் கொடுக் கும் முக்கிய பிரச்சினைகளாக விவசாயி களுக்கு நிலம் உடைமை இல்லாது இருத் தல், சிறிய நிலம் மட்டுமே உள்ள விவசாயி களாக இருத்தல், விலைத்தளம்பல்கள், சந் தைப்படுத்தலில் உள்ள சீரின்மைகள், மூல தன பற்றாக்குறை, கடன் பெறுவதில் உள்ள பாதிப்புக்கள், உரிய காலத்தில் கடன் பெற முடியாமை என்பன தென்படுகின்றன. இவ் வாறான பிரச்சினைகளைக் குறைப்பதில் கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியும். இவ் வாறான பிரச்சினைகளை தீர்ப்பதில் ஏனைய விவசாய அமைப்புக்களை விட இச் சங்கங் கள் கூடியளவு பொருத்தப்பாடுடைய வை் யாக காணப்படுகின்றன. பிரச்சினைகளின் மூல காரணத்தை அறிந்து கொள்வதன் மூலமும் தேவைகளை சரியாக இனங்கா ணுவதன் மூலமும் அவற்றை தீர்ப்பதற்கு அவ்விவசாயிகளின் உணர்வு பூர்வமான பங்களிப்புடனும் அரச, அரச சார்பற்ற நிறு வன உதவிகளையும் பெற்று தீர்வு காண முயற்சிகளை மேற் கொள்வதன் மூலம் கூடிய வருமானம் உழைத்தல், போசாக்கு உணவினை பெறுதல், கூடிய அளவு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற வற்றை இச்சங்கங்கள் பெற்றுக்கொடுக் கலாம். விவசாயத்துறை ஆயினும் சரி குடி சைக்கைத்தொழில், விவசாயத்துடன் துணைத் தொழில்களான கால்நடை வளர்ப்பு போன்ற வற்றில் ஈடுபடும் கிராமிய மக்கள் முகம் கொடுக்கும் ஓர் பாரிய பிரச்சினை தொழிலை ஆரம்பிப்பதற்கோ மேலும் விருத்தி செய்வ தற்கோ போதியளவு மூலதனம் இன்மை யாகும்.

இதன் காரணமாக இவர்களின் உற்பத்தித் திறனும் வருமானமும் குறைவு, இதனால் சேமிப்பு குறைவு, விதைப்பிற்கும் அறுவடைக் கும் இடைப்பட்ட காலத்தில் நுகர்விற்காக கடன் பெறுதல் என்பன காணப்படுகின்றன.

(தொடரும்)

உன் அயலான் வருகை உனக்குத் தொந்தரவாக இருக்கிறதா? அவனுக்குக்கடன் கொடு.

–இத்தாலி

வலம்புரி

## இந்தியாவைச் சமாளிக்கும் ஜனாதிபதி மகிந்தவின் பயணம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்றுள்ளார். இந்தியா சென்ற அவர் திருப்பதிக்குச் சென்று வெங்கடேஸ்வரப் பெருமானை தரிசித்துள்ளார்.

இறைவன் நம்முள்ளத்தில் உறைந்துள்ளான். பிறர்க்குத் தீங்கிளைக்காதபோது – மற்றவர்களின் மனதை நோகடிக்காத வாழ்வை மேற்கொள்ளும்போது மனிதன் இறைவனாகக் காட்சி தருகிறான். இதுவே யதார்த்தம்.

இந்த யதார்த்தங்களை எழுதி – பேசி புரிய வைப்பதென்பது முடியாத காரியம். இயல்பாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்த இயல்பு யாரிடம் ஏற்படுகின்றதோ அவர்களே ஆத்ம சுகத்தை அனுபவிக்கின்றனர். அவர்களாலேயே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

இந்தத் தத்துவங்களை தெரிவித்து காலத்தை வீணடிப்பதை விடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருப்பதிக்குச் சென்று வழிபாடாற்றியது எதற்காக? ஏன் அவர் அவசரமாக இந்தியா சென்றார் என்ற கேள்விகள் பற்றி ஆராய்வது சாலப்பொருத்துடையதாகும்.

இலங்கைக்கு வந்திருந்த இந்திய விசேட குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது காரசாரமான விவாதம் நடத்தியது.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு திருப்தி அளிக்கவில்லை. குறிப்பாக இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், மகிந்த ராஜபக்ஷவுடன் கடுமையாக வாதிட்டார்.

நாராயணனின் வாக்குவாதத்தை சமாளிக்க மகிந்த ராஜபக்ஷவும் கடுமையான தொனியில் கதைத்தார்.

சந்தர்ப்பத்தில் கதைத்திருந்தாலும் இந்தியாவுடன் பகைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாதென்பதால் இப்போது அவர் அங்கு சென்றுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் அழைக்காத நிலையில் இந்தியா சென்ற மகிந்த இப்போது திருப்பதியானை தரிசிக்கின்றார்.

அந்தத் தரிசிப்பு இந்திய மத்திய அரசை சமாளிப்பதற்கானதென்பதை எவரும் உய்த்தறிவர்.

அதேநேரம் சார்க் மாநாடு நடப்பதற்கு முதல் இந்தியாவுக்கு விஜயம் செய்வதனூடாக பிரதமர் மன்மோகன் சிங் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதை உறுதி செய்வதும் மகிந்தவின் நோக்கமாகும்.

ஒரு எறியில் இரண்டு மாங்காயை வீழ்த்தும் நோக்கில் இந்தியா சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நோக்கத்தில் வெற்றியடைவாரா? என்பதை பொறுத்திருந்து பார்க்கும் அதே சமயம், இந்தியாவுடனான உறவு இறுக சீனா, பாகிஸ்தான் என்பவற்றுடனான உறவு தளர்வதை மகிந்தவால் தடுக்கமுடியாதிருப்பது நிஜமே.

# விலையேற்றம் பற்றி பேசுவதை விடுத்து தனிநபர் வருமானத்தை உயர்த்தும் வழிகளைத் தேட வேண்டும்

## பிரதி அமைச்சர் கே.ஏ. பாயிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இன்று நாட்டில் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொருட்களின் விலை உயர்வு, வாழ்க்கைச் செலவுஅதிகரிப்பு பற்றி பேசுவதைவிட ஒவ்வொருவரும் தங்களது குடும்பவருமானத்தை உயர்த்தும் வழிகளைக் காண்பதுவே முக்கியமான விடையமாகும் என்று கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் கே.ஏ. பாயிஸ் தெரிவித்தார்.

புத்தளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிரம்பியடி கிராம அலுவலர் பிரிவில் இடம் பெற்ற மீள் எழுச்சி வேலைத் திட்டம் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக்கூட்டத்தில் அவர் தொடந்து பேசுகையில்கூறியதாவது,

இன்றுநாட்டின் ஒரு பகுதியில்யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. எமது அரசு யுத்தத்தைக்காரணம் காட்டி பின் தங்கிய பிரதேசங்களில் மேற்கொள்ளப் படவேண்டிய அபிவிருத்திப் பணிகளை பிற்போடவில்லை. சகல அபிவிருத்திப் பணிகளும் அவ்வாறே முன்னெடுக்கப் படுகின்றன.

இன்று . நாட்டில்யுத்தத்திற்காகப் பெருமளவு நிதிசெலவு செய்யப்படும் அதே நேரம் அபிவிருத் திப் பணிகளும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் அபிவிருத்தியில் பின்தங்கியிருந்த எமது புத்தள பிரதேசம் இன்று பாரிய நிதி ஒதுக்கிடுகள் மூலம் பல்வேறு அபிவிருத்தி களைக் கண்டுவருகிறது.

மஹிந்தசிந்தனை வேலைத் திட்டதின் மூலம் கடந்தவருடம் புத்தள பிரதேசத்தில் பாரிய நிதி அபிவிருத்திக் காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டது. எனது அமைச்சின் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தைமேம்படுத்தும் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடை முறைப் படுத்தப்பட்டன . குடும்பங்களின் வருவாயைஅதிகரிக்க சுயதொழில் வேலைத் திட்டங்களுக்கான வாய்ப்புக்கள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டன. இன்று இங்கு பசுக்களில்இருந்து இரண்டு லீற்றர் பாலையேநாம் பெறுகின்றோம் இதனை 20 முதல் 30 லீற்றராக அதிகரிக்க எடுக்க வேண்டிய நடவடிக் கைகளை ஆரம்பித்துள்ளோம் நல்ல இன பசுக்கள் வெளிநாட்டில் இருந்து இறக்கு மதி செய்யப்படவுள்ளன. இவை மக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் குடும்பவருமானத்தைஅதிகரிப்பதேஎனது நோக்கமாகும்.

இந்த சிரம்பியடிபிரதேசம் மிருக வளர்ப்புக்கு மிகவும் ஏற்றஒரு பிரதேசமாகும். முயல் வளர்ப்பு மூலம் மாதம் கணி சமானவருமானத்தைப்பெற முடியும் இவ்வாறு உயர் இன பசுக்கள், காடைக் கோழிகள், முயல்கள் என்பவற்றை எமது அமைச்சின்மூலம் நாம் மக்களுக்கு பகிர்ந்தளித்துள்ளோம்.

இன்று உலக சந்தையில் எரி பொருள் விலையேற்றம் காரணமாக எமது நாடு மாத்திரமின்றி சகல நாடுகளிலுமே வாழ்க்கைச் செலவு அதிகரித் துள்ளது. பெற்றோலிய பொருட்களின் விலையேற்றம் நிகழுமானால் அதனால் பொருட்களின் விலையேற்றம் ஏற் படுவது சகஜமே இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பது உண்மை தான் எனினும் அதைப்பற்றி பேசிக் கொண்டிருப்பதைவிட ஒவ் வொருவரும் தங்களதுதனிநபர்வருமானங்களை அதிகரிப்பதற்கான வழிகளைத் தேட வேண்டும் என்றார்.

ஓ

# ‘மஹிந்த சிந்தனையில் நம்பிக்கை வைத்திருக்கின்றேன்’ சமூகவியலாளர் பட்டமளிப்பு விழாவில் -டக்ளஸ்

(கொழும்பு)

சமூகத்துடனான ஒன்றிணைந்த சேவையின் அவசியம் பொது மக்களை கௌரவமாக நடத்த வேண்டியதன் முக்கியத்துவம் ஆகியவற்றுக்கு மதிப் பளித்துள்ள மஹிந்த சிந்தனையில் நம்பிக்கை வைத்திருப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நல்த்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத் தின் வைபவத்திற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில் , சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தின் வரலாற்றில் இன்று நாம் ஒரு மைல் கல்லை எட்டியுள்ளோம்.

அதிர்ஷ்டசாலிகளான 18 பட்டதாரி மாணவர்களுக்கு சமூக சேவைத் துறை யில் இள மாணி பட்டங்களை வழங்கு வது பெருமைக் குரியதாகும். சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் என்ற வகையில் அமைச் சரின் கீழ் இயங்கும் சமூக அபி விருத் திக்கான தேசிய நிறுவனமே இலங் கையில் சமூக சேவைக்கான பயிற்சித் துறையில் பட்டதாரிகளை உருவாக்கக் கூடிய முதன்மையான நிறுவனமா கும்.

பட்ப்படிப்புகளை வழங்குவதற் கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்படி நிறுவனத்திற்கு கடந்த 2005ஆம் ஆண்டில் வழங்கியி ருந்தது.

இவ்வருட ஆரம்பத்தில் சமூக சேவைத் துறையில் இலங்கையில் முதலாவது முதுமணி கற்கை நெறியும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமூக அபிவிருத்திக்கான மனித வளத்தை ஒன்று சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம்.

சமூக சேவைத் துறையில் பட்டதாரிகளாக வெளியேறுவோர் தனிப்பட்ட , குழு சார்ந்த சிறந்த ஆளுமையை பெற்றிருப்பதுடன் சமூகத்தையும் நலன்புரி சேவை களையும் முகாமைத்துவம் செய்யக் கூடிய வர்களாகவும் இருப்பர் என்பதில் எமக்கு நம் பிக்கையிருக்கின்றது.

அந்த வகையில் சமூகத்துடனான ஒன்றிணைந்த சேவைகளின் அவசியம் பொது மக்களை கௌரவமாக நடத்த வேண் டியதன் முக்கியத்துவம் போன்றவற்றுக்கு மதிப்பளித் திருக்கின்ற மஹிந்த சிந்தனையிலும் நம் பிக்கை வைத்துள்ளேன் என்றார்.

ஓ

# விதைத்தலும் விளைச்சலும்

ஒரு பலம் புழுதிகால்பலம் ஆகும் படி உழுது காயவிட்டால் ஒரு பிடி எருவும் இடவேண்டாம். அந் நிலத்தில் பயிர் செழித்துவிளையும்.

பொய்யா மொழிப் புலவரின் இக் கூற்றிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. அதாவது பயிர் நன்கு செழித்து வளர வேண்டும் என்றால் அந்த விளை நிலம் நன்கு பக்குவப்படுத்தப் பட்டு பண்படுத்தப் பட்டதாக இருக்க வேண்டும்.

இது இன்றைய நற்செய்திக்கு சாலப் பொருந்தும். ஆண்டவர் இயேசு மக்களுக்கு இறையாட்சியைப்பற்றிய தத்துவங்களையும் இறைவார்த்தையின் வல்லமையை மக்களுக்கு எளிதாக புரிய வைக்க பல உவமைகளைக்கொண்டு விளங்குகின்றார்.

கையாளும் போதும் கூட மக்களுடைய வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகள் நடப்புகள், பழக்க வழக்கங்களையே கையாள்கின்றார்.

உதாரணமாக் ஆடு, ஆட்டுபட்டி, ஆயன், புதையல், வணிகம், விளக்கு, உப்பு போன்றவைகள் இன்றைய நற்செய்தியிலேயே மக்களின் அடிப்படைத் தொழிலாகிய உழவு அது தொடர்புடைய நிலம், விதை அறுவடை போன்ற உதாரணங்களைப் பயன்படுத்துகின்றார்.

இப்படி விளக்கும் போது இயேசு தான்சொல்லவந்த செய்தியை மக்களுக்கு எளிதாக அதேவேளையில் ஆழமாகவும் எடுத்துரைக்கின்றார்.

பொதுவாக விதைத் தலைப் பற்றியும் விளைச்சலைப்பற்றியும் கவலையில்லை. தக்க பருவத்தில் நல்ல விதையை விதைத்து எருபோட்டு

### பரமபிதா காட்டிய பாதை

தண்ணீர் பாய்ச்சினால் விளைச்சல் நன்றாக இருக்கும். ஆனால் நமது ஒரே கவலை நிலத்தின் பயன்பாடும் அதன் தரமும் தான். பயிர்செய்யப்படும் நிலம் களர் நிலமா? கரிசல் நிலமா? களிமண் நிலமா? அல்லது கட்டாந் தரையா? இங்கு தான் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஆண்டவர் இயேசு இன்றைய நற்செய்தியிலேயே சொல்கின்ற மையக் கருத்து இறைவார்த்தையைப் பற்றியது ஆகும்.

இறைவார்த்தை எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது விளைந்து பலனளிப்பது அவரவர்



நிலமாகிய உள்ளத்தையும் அதன் தரத்தையும் பொறுத்தது.

நல்ல பலன் தரவேண்டும் என்றால் நாம் நிலமாகிய உள்ளத்தை நன்கு பக்குவப்படுத்தி பயனளிக்க செய்ய வேண்டும்.

நாம் யார்? வார்த்தையைக் கோட்பவராய் ? அல்லது வாழ்பவரா? வார்த்தை கேட்பவராக மட்டும் இருந்தால் பாதை நிலம் போலவும் பாறை நிலம் போலவும் புதர் நிலம் போலவும் பலன் கொடுக்காமல் வாழ்வோம். எனவே நல்ல நிலமாக இருந்து வார்த்தையை வாழ்ந்து காட்டுவோம். நல்ல பலனை மண்ணில் வளர்ப்போம்.

ஜோன் ரொபேர்ட்

மாநகர சபை, யாழ்ப்...



## வதந்திகளை நம்பவேண்டாம்...

என கணக்கிடுகிறது அரசு.

எனவே மக்களின் மனரீதியான தைரியத்தை சரிப்பதன் மூலம் தமிழர் போராட்டத்தை அழிக்க முடியும் என எண்ணி வதந்திகள் பரப்பப் படுகின்றன.

இந்த வதந்திகளின் காவு சக்தியாக நாம் இருந்தோமானால் அது நம் இனத்தை பலவீனமாக்கும் செயலுக்கு நாமே துணைபோவதாக அமையும்.

எதிரியினால் திட்டமிட்டு பரப்பப்படும் உண்மையைப்போன்று தோற்றமளிக்கும் பொய்களை ஆய்வு செய்யும் சுயவிழிப்பை எமது மக்கள் கொண்டிருக்கவேண்டும்.

நம்பிக்கையீனங்களை உருவாக்கி மக்களின் தன்னம்பிக்கையை உடைத்துவிட முயலும் எதிரியின் எண்ணத்தை முறியடிக்க வேண்டும்.

வதந்திகள் கொடிய பாம்மை விட ஆபத்தானவை. உண்மை ஊர் சுற்றி முடிப்பதற்குள் வதந்திகள் உலகைச்சுற்றி வந்துவிடும். எனவே ஆதாரமற்ற தகவல்களை அப்படியே நம்பிவிடும் மன நிலையில் இருந்து விடுபட்டு பகுத்தறியும் திறன் கொண்ட மக்களாக நாம் இருக்க வேண்டும்.

இதுவே எதிரியின் உளவியல் போரை வெற்றி கொண்டு தமிழர் தாய் மண்ணை விடுவித்து பலமான தேசமாக்க துணை நிற்கும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## 'சிம்' அட்டைகளையும்...

வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய நடைமுறை குறித்து தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது,

கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாக பயன்படுத்துவதால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதால் அதனை தடுக்கும் நோக்கிலேயே இந்தப் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படுகின்றன.

1991ஆம்ஆண்டு தொலைத் தொடர்பாடல் சட்டத்தின் 25-வது சரத்து மற்றும் 1996ஆம் ஆண்டின் 27-வது சரத்துக்கு அமைவாக இந்த நடைமுறைகள் பின்பற்றப் படவுள்ளன. இந்த புதிய நடைமுறைகளின் பிரகாரம் எந்த ஒரு நபரும் தனக்குரிய சிம் காட்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அனுமதியின்றி விற்பனை செய்ய முடியாது.

சிம் காட்களை வழங்கும் நிறுவனங்கள் அனைத்தும் பாவனையாளரின் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னரே அதனை விநியோகிக்க வேண்டும்.

ஒருவர் கொள்வனவு செய்யும் சிம் காட்டை பிறிதொருவர் பயன்படுத்த முடியாது. அப்படி பயன்படுத்துவதாயின் அதற்கு அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

அதேநேரம்தமது பெயரில்அன்றி வேறு நபரின் பெயரிற்கான சிம் காட்களை தற்போது பயன்படுத்தி வருபவர்கள் அதனை தமது பெயருக்கு மாற்றவேண்டும்.

அதேநேரம் சி.டி.எம்.ஏ தொலைபேசியை பயன்படுத்துபவர் அதனை குறிப்பிட்ட முகவரியில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இந்த புதிய நடைமுறை உடனடியாக அமுலுக்கு வருவதாக தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த காரியப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சுமார் 20 மில்லியன் மக்களில் 12 மில்லியன் பேர் தொலைபேசிப் பாவனையாளர்கள் ஆவர்.

இவர்களில் 10 மில்லியன் பேர் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களுக்கு அடுத்து வரும் பாவனைக்கான பட்டியலுடன் இதற்கான அறிவுறுத்தல் பிரசுரமும் சிம் காட்களை அத்தாட்சிப் படுத்தும் ஆவணமும் இணைக்கப் பட்டிருக்கும் என்று தொலைத் தொடர்பாடல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5)

## கடத்தல்...

மேற்கொண்டு கப்பப் பணத்தை கோரும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என தங்களை இந்தக் கும்பல் அடையாளப்படுத்திக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## ஆயுதங்களை கீழே...

திருப்பதி வெங்கடேஸ்வரர் கோயிலில் சுமார் 35 நிமிடங்கள் வழிபாட்டில் பங்கு பற்றிய இவர்கள் வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் திருப்பதியிலுள்ள சிறிபத்மாவதி விருந்தினர் விடுதியில் பலத்த பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுக்காலை மீண்டும் திருப்பதி கோயிலில் வழிபாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினர் நேற்றுமாலை மீண்டும் அங்கிருந்து புறப்பட்டனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பத்துப்பேர் அடங்கிய குழுவினர் திருப்பதியில் வெள்ளி இரவு தங்கியிருந்து வழிபாட்டில் கலந்து கொண்டதாக திருப்பதி கோவில் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ குழுவினரின் திருப்பதி விஜயத்தை முன்னிட்டு அங்கு மேலதிக பொலிஸார் 500 பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினரின் இந்த விஜயம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதும் இவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு வெளியே ஊடகவியலாளர்கள் குழுமியிருந்தனர்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு சரியான தருணமும் இடமும் இதுவல்ல என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலில் தெரிவித்த போதும் பின்னர் அங்கு நின்ற ஊடகவியலாளர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

ஊடகவியலாளர்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கு இலங்கை அரசாங்கம் தயாராகவே உள்ளது. ஆனால் அதற்கு முதல் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழேபோடவேண்டும். இலங்கையில் அமைதி திரும்ப விடுதலைப் புலிகளுடன் பேச நாங்கள் எப்போதும் தயார்தான்.

தீர்வு அவர்கள் (புலிகள்) கையில் தான் உள்ளது. இதுவரை இலங்கையில் நடந்த சண்டைகளில் 25 ஆயிரம் அப்பாவிகளின் உயிர்கள் பலியாகியுள்ளன. இதற்கு முடிவு கட்ட வேண்டுமென்றால் விடுதலைப் புலிகள் தான் முன்வரவேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளாக இனப் போரால் இலங்கையின் அமைதி பாதிக்கப்பட்டுள்ளது. வன்முறையை நிறுத்த இலங்கை அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு உலகிலுள்ள எந்த நாடும் ஆதரவு கொடுக்கவில்லை எனவே இந்தியாவும் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யும் என நான் நினைக்கவில்லை.

இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை அரசு எந்தத் தொந்தரவையும் கொடுக்கவில்லை. இருப்பினும் இலங்கை அரசின் பெயரை கெடுக்கும் நோக்கில் மீனவர்களை தாக்குவது புலிகளாக இருக்கக் கூடும் என்று நான் கருதுகின்றேன்.

சார்க் அமைப்பின் மாநாடுகளில் விடுதலைப் புலிகள் பிரச்சினையை இலங்கை அரசு எழுப்பி வந்திருக்கிறது. கொழும்பில் நடைபெறவுள்ள 15-வது சார்க் மாநாட்டிலும் இப்பிரச்சினையை எழுப்புவோம் என்றார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட விஜயம் இதுஎன்று தெரிவிக்கப்பட்டபோதும் அவர் இந்தியாவில் அந்நாட்டுப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று வெளியான தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை.

பிரதமர் மன்மோகன் சிங்குடனான சந்திப்புக்குறித்து வெளியாகிய தகவலை இந்திய மத்திய அரசு உறுதி செய்ய மறுத்தபோதும் இந்த சந்திப்புக்குறித்த தகவலை அது நிராகரிக்கவும் இல்லை என்று இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சார்க் மாநாட்டுக்கு இந்தியப் படைகள் இலங்கைக்கு வருவதாக வெளியான தகவலையும் இந்திய அரச தரப்புத் தகவல்கள் நிராகரித்துள்ளன.

சார்க் மாநாட்டுக்காக இந்தியப் படைகள் கொழும்புக்குச் செல்லவுள்ளன என்று வெளியாகிய தகவல்களில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ள அரச தரப்புத் தகவல்கள் சார்க் மாநாட்டுக்கான பாதுகாப்பை கவனிக்க வேண்டிய பொறுப்பு மாநாட்டை நடத்தும் நாட்டுக்கே உரியதாகும்.

இந்தியப் படைகளை அந்த நாட்டுக்கு அனுப்புவது இந்திய அரசின் நடைமுறை இல்லை என்றும் தெரிவித்துள்ளன. (ந-5)

## இலங்கைக்கான...

கமாக நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம், ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் உள்ளிட்ட பாரிய திட்டங்களையும் சீனா இலங்கையில் முன்னெடுத்து வருகின்றது.

இதனைத் கருத்தில் கொண்டு மன்னார் எண்ணெய் வளஆய்வுகளை சீனாவுக்கு வழங்க இலங்கை தீர்மானித்திருந்ததாகவும் எனினும் இதில் இந்தியா இடையில் தலையிட்டதாகவும் லங்கா நியூஸ் பேப்பர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவிடம் இருந்து ஆயுதங்கள் கொள்வனவை நிறுத்துமாறு கோரியிருந்த இந்தியா, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை கைவிட்டு சமாதானத் தீர்வொன்றை எட்டுமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறி விஜய் சிங் ஆகியோர் சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து சென்ற நிலையில் எண்ணெய் வளஆய்வு தொடர்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக சீனா புதுடில்லியுடன் இராஜதந்திர ரீதியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட விருப்பதாகவும் அந்த ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பரிசுத்தினம் - 2008

தலைவர்:- திரு. வீ.கணேசராசா (அதிபர்)
காலம்:- 15.07.2008
(செவ்வாய்க்கிழமை மு.ப. 9.45 மணி)
பிரதம விருந்தினர்:- திரு.க.கணேஷ் (அரச அதிபர்)
பரிசில் வழங்கல்:- திருமதி பரமேஸ்வரி கணேஷ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(C-1305)

ST. JOHN'S COLLEGE JAFFNA
ANNUAL PRIZE GIVING
2008

Thursday 17th July 2008
at 10.00 a.m.

Chief Guest
Prof.M.Nadarajasundaram
*Former Dean,*
*Faculty of Management Studies & Commerce*
*University of Jaffna*

Chairman
Ven.S.P.Nesakumar
*Archdeacon of Jaffna*

***Parents, Old Boys & Well-wishers are cordially invited.***

Principal,Staff & Students.

(C-1310)

A/L - 2009, 2008
பௌதிகவியல்
இணைந்த கணித
வகுப்புகள்

மேற்படி பாடங்களை பிரபல கல்லூரிகளில் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்த ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட வினாத்தாள் உட்பட M.C.Q க்குரிய விளக்க விடைகளுடன் சிறப்பாக தமிழ்/ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படும். சிறு குழுக்களாகவோ, தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.

சந்திப்பு தினசரி 3 மணிக்குப் பின்பு. முழுப்பாடத்திட்டம் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஆசிரியர்: R.பாலசுப்பிரமணியம் B.Sc., (Cey.) Dip.in Ed.
42/1,இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(1495)

மணமகன் தேவை
1970 சைவ வேளாள மணமகளுக்கு மணமகன் தேவை
தொடர்பு:
S.P.இராசநாயகம்,
வட்டு.கிழக்கு,
வட்டுக்கோட்டை.
(1447)

மிக மலிவு விலைகளில்...
Pentium 4
(17" Dell Moniter,Intel Mother Board, Intel Processor 1.6, 256 Ram, CD ROM,40GB Hard Disk, Keyboard & Optical Mouse
ரூபா 32,750 மட்டுமே





திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆக் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.